326

# ஜகன்மோகினி



326
OFFICE OF THE REGISTRAR ...
19 AUG 1942
MADRAS
JL
N22SM
183070

அ 2 ணா

ஆகஸ்டு '42

வை.மு.கோதைநாயகி அம்மாள்

ஆகஸ்டு 1942 | சித்திரபானு ஆடி

மலர் 19. இதழ் 8.

## விஷய அட்டவணை

| | | |
|---|---|---|
| பெரியாழ்வார் கொண்டாடிய ஸ்ரீ ஜயந்தி | பி. ஸ்ரீ. | 1 |
| ஆடியின் அபூர்வம் | "குகப்ரியை" | 7 |
| பாரதநாட்டு திலகங்கள்-8. ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள் | வை. மு. கோ. | 11 |
| திருப்பதி யாத்திரை (9-வது பகுதி) | வை. மு. ஸ்ரீ. | 14 |
| சித்திர ரகஸா-சென்னையில் சங்கு ஊதிய அன்று | "கார்த்திகை" | 16 |
| வாத்ஸல்யம்-59-வது நாவல்-(ஆரம்பம்) | வை. மு. கோ. | 1-32 |

# நீங்கள் கவனித்திருக்கலாம்

இரண்டணவுக்கு விற்கும் மற்றெந்த பத்திரிகையையும் விட நம் "மோகினி"யிலேதான் அதிகமான விஷயங்களடங்கிய பக்கங்கள் (More reading matter) வெளியாவதை நீங்கள் கவனித்திருக்கலாம். மற்ற பத்திரிகைகளில் விளம்பரம், போட்டிப்பரிசுகள் அடங்கிய பக்கங்கள் நீங்கலாக படிக்கக்கூடிய விஷயங்களடங்கிய புக்கங்கள் சுமார் 30 லிருந்து 40 வரைதான் வெளி வருகின்றன.

# நீங்கள் கவனிக்கவேண்டியது

நீங்கள் அவசியம் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது. அது பேப்பர் பஞ்சத்தைக் குறித்ததுதான் என்று சொல்லவேண்டுமோ? மத்திய சர்க்காரின் 'நியூஸ் பிரின்ட் கன்ட்ரோல்' திட்டத்தின் பிரகாரம் நம் மோகினிக்கு அளிக்கப்பட்டுள்ள பேப்பர் "கோட்டா"வின்படி ஒவ்வொரு இதழும் 32 பக்கங்கள் அச்சிட்டால்தான் தற்போது "மோகினி"யை வாங்கும் அன்பர்கள் எல்லோருக்கும் மோகினியின் பிரதி கிடைக்கும். அவ்வாறு 32 பக்கங்கள் மாத்திரம் இருந்தால் போதுமா? நேயர்களுக்கு இன்னும் அதிகரித்த பக்கங்களை அளிக்கவேண்டுமென்ற அவாவில் "பாதாமி" பேப்பரில் மோகினியின் ஒரு பகுதியை அச்சிட முன் வந்துள்ளோம். கதைப் பகுதி தவிர மற்ற அம்சங்கள் இந்த பேப்பரில்தான் வெளிவரும்.

# பிரமித்துவிடுவீர்கள்!

இம்மாதிரியான முறையில் மோகினியின் அன்பர்களுக்குச் சேவை செய்ய முன்வந்ததால் ஏற்படும் அதிகச் செலவைப்பற்றித் தெரிந்தால் பிரமித்துவிடுவீர்கள். இப்போது அச்சிடும் வெள்ளை ரப்பு பேப்பரைவிட, இப்போது அதிகப்படியாக சேர்த்துள்ள பாதாமி பேப்பர் $1\frac{1}{2}$ மடங்குக்குமேல் விலையாகிறது. அதாவது யுத்தம் ஆரம்பித்தற்கு முன் ரப் பேப்பர் என்ன விலைக்கு வாங்கினேமோ அதைப்போல் 8 மடங்கு விலையில் இப்போது பாதாமி பேபரும் 5 மடங்கு விலையில் சர்க்காரால் கட்டுப்படுத்தப்பட்ட ரப் பேப்பரும் வாங்குகிறோம். இந்த அபாரமான விலை யுயர்வைக் கண்டு நீங்கள் பிரமித்துவிடுவீர்களென்பதில் சந்தேகமென்ன?

மானேஜர்.

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -ஸ்ரீ. வீரராகவ கவி.



| மலர் 19 | சித்ரபானு௵ ஆடி<br>ஆகஸ்டு 1942 | இதழ் 8 |
|---|---|---|



83070




19 AUG 194

## பி.ஸ்ரீ

## (ஆழ்வார்கள் கண்ட அழகுத் தெய்வம்)

### 3 பெரியாழ்வார் கொண்டாடிய ஸ்ரீஜயந்தி

பெரியோர்கள், அவதார புருஷர்கள் முதலானவர்களின் பிறந்த நாள்-கொண்டாட்டத்தை ஜயந்தி என்கிறோம். புத்த ஜயந்தி, மகாவீர ஜயந்தி, காந்தி ஜயந்தி என்றெல்லாம் அந்த அந்த அவதார மூர்த்தி அல்லது பெரியோரின் பெயரோடு 'ஜயந்தி' என்ற வார்த்தையைச் சேர்த்து அவரவர் பிறந்த நாள்-வைபவத்தைக் குறிப்பிடுகிறோம். 'கிறிஸ்துமஸ்' கிறிஸ்து ஜயந்தி; ஸ்ரீராம நவமி ஸ்ரீராம ஜயந்தி. ஆனால் ஸ்ரீஜயந்தி யென்று சிறப்பித்துப் பேசுவது ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தியைத்தான்.

ஒவ்வொரு வருஷமும் நாம் ஸ்ரீஜயந்தி கொண்டாடுகிறோம். பகலில் பட்டினி; இரவிலே கண்ணன் பிறந்ததும் விருந்து. ஆனால் சுமார்1200வருஷங்களுக்குமுன் தமிழ்ப்பெரியோர்களில்ஒருவரான பெரியாழ்வார் கொண்டாடியதுபோல், ஸ்ரீஜயந்தி கொண்டாடினால்தான், அதன் முழுப் பலனையும் அடைந்து அனுபவிக்கமுடியும்.

## திருக்கோட்டியூரில் பெரியாழ்வார்

சிராவண மாசத்திலே அபர பட்சத்து அஷ்டமியோடு ரோகிணி நட்சத்திரம் கூடிய அந்த அவதார தினத்தைப் பெரியாழ்வாரும் நம்மைப்போல் ஒவ்வொரு வருஷமும் விழாவாகக் கொண்டாடி யிருப்பார். ஆனால் ஆழ்வாரல்லவா? ஆழ்வார்களிலும், சிறப்பாகக் கிருஷ்ண பக்தியிலே முழுக்க முழுக்க ஆழ்ந்து போனவரல்லவா? அந்தக் 'கண்ணன் பிறப்பை' அப்படியே அனுபவித்துப் பார்க்க ஆசை கொண்டார்.

ஆசை நிறைவேறி அந்த அனுபவம் பரிபூர்ணமாகக் கிடைத்தது கோஷ்டீபுரம் என்ற திருக்கோட்டியூரிலே. தமது இருப்பிடமாகிய ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து வந்திருந்தார்.

'வண்ண மாடங்கள் சூழ்திருக் கோட்டியூர்'
[வண்ணம்—அழகு]
'செந்நெ லார்வயல் சூழ்திருக் கோட்டியூர்'
[ஆர்--நிறைந்த]

என்று தாம் அபிமானித்த—இயற்கை யழகும் செயற்கை யழகும் நிறைந்த—ஸ்தலத்திலே, பெரியாழ்வார் தமது போன்பரும், பாக வதாபிமானியும், பாண்டிய ராஜாவின் புரோகிதருமான செல்வ நம்பியோடு ஸௌம்ய நாராயண மூர்த்தியைத் தரிசித்துக்கொண் டிருந்தார்—ஒரு ஸ்ரீஜயந்தி தினத்திலே. அந்த விக்கிரகம் ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தை ஞாபகப்படுத்தியது. உடனே ஆழ்வாரின் கவியுள்ளம் அந்த அவதார காலத்திற்கே சென்று, அந்த முதலாவது ஸ்ரீ ஜயந்தியையே கொண்டாடத் தொடங்கிவிட்டது. அப்போது அக் கோவில் இவர் மனக் கண்ணுக்கு நந்தகோபருடைய மாளிகை யாகவும், திருக்கோட்டியூர் கோகுலம் என்ற ஆய்ப்பாடியாகவும் மாறிவிட்டன.

## கோஷ்டியூர் கோகுலமானது

கம்ஸனுடைய சிறைக் கூடத்திலே பிறந்த குழந்தை ஆபத்திற்குத் தப்பி ஆய்ப்பாடிக்கு வந்துவிட்டது. ஒரே குதூகலம் மாளிகை யெங்கும்—ஊரெங்கும். அந்தக் குதூகலத்திலே மாளிகையிலுள்ளவர்கள் எண்ணெயையும் மஞ்சள்-பொடியையும் ஒருவர் மேல் ஒருவர் தூவிக்கொண்டார்கள். அவை ஒன்றாய்க் கலந்து ஒரே சேறாகிவிட்டனவாம் அந்த முற்றமெங்கும்.

இனி ஊரின் குதூகலத்தை எப்படி வர்ணிப்பது? பெரியாழ்வார் வர்ணிக்கவில்லை; பார்த்தபடியே பேசுகிறார்:

'ஓடு வார், விழு வார்; உகந்(து) ஆலிப்பார்;
நாடு வார்; 'நம்பி ரான்எங்குத் தான்? என்பார்;
பாடு வார்களும், பல்பறை கொட்ட நின்(று)
ஆடு வார்களும் ஆயிற்(று) ஆய்ப் பாடியே!'

[ஆலிப்பார்-ஆரவாரஞ் செய்வார். எங்குத்தான்-எங்கேதான். பல்-பல]

குழந்தையைப் பார்க்க ஓடி வருகிறார்கள். ஓடும்போதே சிலர் வழுக்கி விழுகிறார்கள்: அவ்வளவு ஆத்திரம், அவ்வளவு உத்ஸாகம். சிலர் ஆரவாரம் செய்கிறார்கள், 'இன்னது செய்கிறோம்!' என்று தெரியாமலே: அவ்வளவு பிரீதி, அவ்வளவு ஆனந்தம். 'எங்கே நம் கண்மணி? எங்கே? எங்கே?' என்று தேடிக்கொண்டு வருகிறார்கள் சிலர். 'எங்கே நமது ராசா! குட்டி மகராசா!' என்று கேட்டுக் கொண்டே வருகிறார்களாம், வழியெல்லாம். சிலருக்கு மகிழ்ச்சி வசனத்தில் அடங்காமல் பாட்டாகப் பொங்கிவிடுகிறது. வேறு சிலருக்கு அந்த மகிழ்ச்சி வாய்ப் பாட்டிலும் அடங்கவில்லையாம்; அவர்கள் நானாவித வாத்தியங்களைக் கொட்டி முழக்கிக் குதூகலப் படுகிறார்கள். இன்னும் சிலர் அந்தக் கொட்டு முழக்கங்களாலும், பாடல்களாலும்ஆவேசம்கொண்டவர்கள்போலக்கூத்தாடுகிறார்கள்.

## ஆனந்தப் பைத்தியம்

ஆனந்தம் மேலும் மேலும் அதிகரிக்கிறது; அதிகரித்து அதி கரித்து அறிவைச் சூறையாடுகிறது.

'உறியை முற்றத்(து) உருட்டிநின்(று) ஆடுவார்;
நறுநெய் பால்தயிர் நன்றாகத் தூவுவார்;
செறிமென் கூந்தல் அவிழத் திளைத்(து)எங்கும்
அறிவ ழிந்தனர் ஆய்ப்பாடி ஆயரே!'

[நறு-மணம் மிக்க. செறி-அடர்ந்த. மென்-மெத்தென்றிருக்கிற. திளைத்து-அசைந்து.]

நெய்யையும் பாலையும் தயிரையும் உறியோடு அறுத்துக் கொண்டு வந்து முற்றத்திலே உருட்டிவிட்டு ஆடுகிறார்களாம் சிலர், ஆனந்தம் உள்ளடங்காமல். சிலர் அவற்றை வாரி வாரி வழங்குகி றார்களாம், வருகிறவர் போகிறவர்களுக்கெல்லாம். தலைமுடி அவிழ்ந்து ஆடுவதும் தெரியாமல் அசைந்தசைந்து ஆடி ஆடி வருகி றார்களாம் சிலர், உன்மத்தர்போலே. அவ்வளவு சந்தோஷப் பெருமை—சந்தோஷப் பைத்தியம் அன்று அந்த ஆய்ப்பாடிக்கு.

நந்தகோபருடைய அரண்மனை வாசலில் ஒரே நெருக்கம். அவ சர அவசரமாய்ச் சோபனம் சொல்லப் புகுந்துகொண்டிருக்கிறவர் களும், புகுந்து பார்த்து வெளியில் போகிறவர்களுமாய், ஒரே ஜன சமுத்திரம். அந்தக் கூட்டத்திலே, "இவ்வளவு புருஷ லட்சண முள்ள குழந்தையை வேறு எங்கே பார்த்தோம்; பார்க்கப்போகி றோம்? எங்கேதான் பார்க்கமுடியும்? திருவோணத்திலே ஜனனம்: உலகத்தை ஆளப்போகிறது! லட்சணங்களும் அப்படி; ரேகை களும் அப்படி!" என்ற வார்த்தைகள் காதில் விழுகின்றன. அவ் வளவு ஆனந்தப் பைத்தியம் அவர்களுக்கு.

## தாயும் குழந்தையும்

கூட்டத்தோடு கூட்டமாய் நாமும், 'நெருக்குண்டோம்! தள் ளுண்டோம்! எனினும் உள்ளே புகுந்து பார்த்துவிட்டோம்!'என்று சொல்லும்படி போய்,

'ஆண் ஒப்பார் இவன் நேர் இல்லை காண்!'

என்றார்களே, அதே குழந்தையைப் பார்த்துவிடுகிறோம், தாயோடு அந்தப்புரத்திலே. அங்கே என்ன நடக்கிறது?

'கையும் காலும் நிமிர்த்து, கடாரநீர்
பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்,
ஐய! நாவழித் தாளுக்(கு), அங் காந்திட,
வையம் ஏழும்கண் டாள்பிள்ளை வாயுளே!'

[நிமிர்த்து-(நீட்டி) நிமிரச் செய்து-கடாரம்-கொப்பரை. ஐய அதிசயம். நா-நாக்கு. வழித்தாளுக்கு-வழித்தவளான யசோதைக்கு. அங்காந்திட-வாயைத் திறக்க. வையம் ஏழும்-ஏழு லோகங்களையும்; அதாவது, உலகங்களையெல்லாம். வாயுளே-வாய்க்குள்ளே.]

தாய் குளிப்பாட்டுகிறாள் குழந்தையை. மருந்துகளும் வாசனைப் பொருள்களும் சேர்த்துக் காய்ச்சின வெந்நீரைக் குளிரப் பண்ணி வைத்திருக்கிறது கொப்பரையில். குழந்தையின் கையையும் காலையும் மெள்ள நீட்டி நிமிர்த்து, 'நீண்டு நிமிர்ந்தான் என் அப்பன்!' என்று கொண்டாடிப் பசு மஞ்சள் உரைத்துப் பூசிப் பையக் குளிப்பாட்டுகிறாள். 'நாக்கை நீட்டு!' என்று கொஞ்சிக்கொண்டே நாக்கு வழிக்கப்போகிறாள். வாயைத் திறக்கிறது குழந்தை. 'அடடா, பாவம்! வாய்க்கும் நாவுக்கும் வித்தியாசம் தெரியாத பச்சைப் பிள்ளை' என்று சொல்லிக்கொண்டு பார்க்கும்போதே,—அது என்ன? கனவா, நனவா? அகில லோகங்களையும் பார்த்துவிடுகிறாளாம் அந்த வாய்க்குள்ளே.

ஆச்சரியமும் ஆனந்தமும் சமுத்திரமாய்ப் பொங்க, அந்தத் தாய் மற்றுமுள்ள பெண்களுக்கும் காட்டுகிறாள் அந்த அற்புதத்தை! அவர்கள் எல்லாரும்,

"ஆயர் புத்திரன் அல்லன், அருந்தெய்வம்!"

என்று கொண்டாடுகிறார்கள். ஒவ்வொரு தாய்க்கும் தன் அருமைக் குழந்தை தெய்வக் குஞ்சுதான்; தெய்வ உருவம்தான்! குழந்தைக் கிருஷ்ணனைக் குறித்துக் கேட்கவா வேணும்? அதிலும் தாயன்புடன் ஆழ்வாரின் தெய்வ அன்பும் சேர்ந்து பேசும்போது!

### வெற்றியும் சக்தியும்

'ஸ்ரீ கிருஷ்ணன்' என்று நாமகரணம் செய்த தினத்திலே ஆய்ப்பாடியில் எல்லாத் திசைகளிலும் ஜய ஸ்தம்பங்கள், வெற்றித் தோரணங்கள் முதலான அலங்காரங்கள். ஏதோ ஓர் அற்புதமான ஜயத்தை அடைந்தவர்களைப்போல் ஆனந்தப்படுகிறார்கள் ஆயர்களெல்லாம். குழந்தைக் கண்ணனைத் தங்கள் தங்கள் கையில் எடுத்துக்கொண்டு பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போகிறார்கள். ஆனால் தாய் மெலிந்துபோயிருக்கிறாளாம். அவளே அப்படிச் சொல்லுகிறாளாமே! அது என்ன செய்தி?

கொஞ்ச நேரம் கழிந்ததும், குழந்தையைத் தொட்டிலில் விடுகிறார்கள். 'தாளி'யென்ற தனித் தொட்டிலில்தான். ஆனால் குழந்

தையும் தூங்கவில்லை; தாயும் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருக்கிறாள். பளிச்சென்று எடுத்து ஒக்கலில் வைத்துப் பார்க்கிறாள்; அணைத்துக்கொண்டு பார்க்கிறாள்,—'என்னடா, கண்ணு! இந்தப் பாடு படுத்துகிறாயே!' என்று. பிறகு ஒரு தோழியை அருகே அழைத்து, 'பாரடீ, இந்தப் பிள்ளையை!' என்று ஒரு குற்றப் பத்திரிகை படிக்கத் தொடங்குகிறாள்.

"கிடக்கில், தொட்டில் கிழிய உதைத்திடும்;
எடுத்துக் கொள்ளில், மருங்கை இறுத்திடும்;
ஒடுக்கிப் புல்கில், உதரத்தே பாய்ந்திடும்:
மிடுக்கி லாமையால் நான்மெலிந் தேன், நங்காய்!"

[கிடக்கில்-கிடந்தானாகில். தொட்டில்-(இங்கே) துணித் தொட்டில்; தூளி. மருங்கு-இடுப்பு. இறுத்திடும்-முறித்துவிடும். புல்கில்-அணைத்துக்கொண்டால். உதரம்-வயிறு. மிடுக்கு-வலிமை; சக்தி. நங்காய்-நங்கையே; தோழியே!]

'கிடக்க விட்டால், தூளியைக் காலால் உதைத்துக் கிழித்துவிடுகிறான்!' என்கிறாள். 'மெத்தென்றிருக்கும் இந்தச் சின்னஞ் சிறு கால் வலிக்குமே!'—என்று எடுத்து ஒக்கலில் வைத்துக்கொண்டால்,அங்கேயிருந்து நழுவி இடுப்பை முறித்துவிடுகிறானாம். 'நமக்கே இப்படி வலிக்கிறதென்றால், குழந்தைக்கு இந்தச் சேஷ்டையினால் எப்படி வலிக்குமோ?' என்று வலிய—ஆசை தீர—அணைத்துத் தழுவிக்கொண்டால், வயிற்றிலே பாய்ந்து உதைக்கிறானாம் துஷ்டக் கிருஷ்ணன். 'அம்மா, தோழீ! சக்தியில்லையடீ எனக்கு. எப்படி மெலிந்து போனேன், பாரடீ!' என்று புகார் செய்யும் தாயைப் பார்த்துக் குழந்தையைப் பார்க்கிறோம். குழந்தையைப் பார்த்துக் கொண்டே தாயையும் பார்க்கிறோம். 'இப்படியெல்லாம் சேஷ்டை செய்யப் பிள்ளைக்குப் பருவம் போதுமா? சக்தி போதுமா?' என்று நினைத்து நினைத்துத் தான் இப்படி மெலிந்துபோனாளோ?—என்று கூட நாம் நினைக்கிறோம்; அனுதாபப்படுகிறோம்; ஆனால் பூரித்துப் போகிறோம்.

## தாயாகிய ஆழ்வார்

வடமதுரையிலே பிறந்து ஆய்ப்பாடியிலே வந்து வளரும் கிருஷ்ணன்தான் குழந்தை யென்றால், இப்படியெல்லாம் குற்றஞ் சாட்டி மெலிந்திருக்கும் தாய் தேவகியல்ல; யசோதைதானே? ஆனால் இந்தக் கேள்விக்கு யசோதையாக நடிக்கும் பெரியாழ்வார்' என்றே பதில் சொல்லிவிடலாம். திருக்கோட்டியூரில், நின்றும் இருந்தும் நடந்தும் கிடந்தும் கூத்தாடியும் கோலம் காட்டும் ஸௌம்ய நாராயண மூர்த்தி குழந்தைக் கிருஷ்ணனாய்ப் பிரத்தியட்சமாக, ஆழ்வார் ஸ்ரீ கிருஷ்ண ஜனனக் காட்சிகளைக் கண்டு காட்டுவதோடு, தாமே தாயாகவும் காட்சி தருகிறார்.

தோழி பதில் சொல்லவில்லை; அனுதாபப்படவில்லை; 'நான் மெலிந்தேன், நங்காய்!' என்று தாய் சொன்னபோதிலும், 'பக்கத்

திலிருப்பது தோழியல்ல; தோழரான செல்வநம்பிதான்!' என்று தெரிந்துகொண்டதும், 'யசோதை' பெரியாழ்வாராகிவிடுகிறார்! அந்தக் கவிதானுபவத்தையும், பக்தி யனுபவத்தையும் தெரிந்து கொண்ட செல்வ நம்பி, "என்ன ஸ்ரீ ஜயந்தி! ஆழ்வாரே! என்ன கொண்டாட்டம்! முதலாவது ஸ்ரீ ஜயந்தியையே பார்த்துவிட்டீர்; அந்த விழாவிலும் கலந்து கொண்டீரே!" என்று பூரித்துப் போகிறார். அந்தத் தாயன்பும் தெய்வ அன்பும் அவரைப் பிரமிக்கச் செய்துவிட்டன.

## ஸ்ரீஜயந்தி - கவிதையும் கதையும்

அந்த முதலாவது ஸ்ரீஜயந்தியைப் பெரியாழ்வார் தாம் பார்த்து அனுபவித்ததோடு,—தாம் கொண்டாடியதோடு,—செல்வ நம்பி முதலானவர்களையும் கொண்டாடி அனுபவிக்கச் செய்தார், தமது பாசுரங்கள் மூலமாக. விஷ்ணு சித்தன் என்ற இந்தப் பெரியாரின் இப் பாசுரங்களை அனுபவித்த பிற்காலத்தாரும் ஆதி ஸ்ரீ ஜயந்தியை அனுபவிக்கும் பாக்கியம் பெற்றார்கள். இக்காலத்திலுள்ள நாமும் இப்பாடல்களை ஓதி ஓதி அந்த ஸ்ரீ ஜயந்தியை ஒருவாறு அனுபவித்துவிடலாம்.

சிறைக் கூடத்திலே பிறந்து, மாடு மேய்ப்பவர்களுக்கிடையே வந்துசேர்ந்த குழந்தை; அந்த ஆயர், ஆய்ச்சிகளின் உத்ஸாகம்; ஒருத்திமகனாய்ப் பிறந்து ஒருத்திமகனாய் ஒளித்து வளரும் அந்த அழகு, அந்த அருள்; வளர்ப்புத் தாயின் ஆனந்தம்; அந்த ஆனந்தத்திலே ஒளித்துக் கிடக்கும் பெற்ற தாயின் பெருந்துயரம்; பிள்ளை வாய்க்குள்ளே தாய் உலகங்களையும் ஆய்ப்பாடியையும் தன்னையும் அந்தப் பிள்ளையையும் கண்டுகொண்ட அற்புதம்; அந்த அற்புதம் கண்டும், பருவத்துக்குத் தகுதியல்லாத சக்தியையும் செயல்களையும் கண்டும், 'துஷ்ட'ப் பிள்ளையாகவும் செல்லப் பிள்ளையாகவும் பாவித்த தாயன்பின் அற்புதம்; ஆய்ப்பாடி ஜயஸ்தம்பமும் ஜயதோரணமும் நாட்டிக் கொண்டாடிய புத்ரோத்ஸவம்; சிறையிலே பிறந்து மாடுகளுக்கும் மேய்ப்பவர்களுக்கும் இடையே கிடந்து வளரும் அந்த அழியா அழகின் வெற்றி, உலகத்திற்கே வெற்றியாகவும், ஆத்மாக்களாகிய பசுக்களுக்கெல்லாம் வெற்றியாகவும் விளையப்போகும் தேவ ரகஸ்யமான அவதார ரகஸ்யம்—இவையெல்லாம் சொல்லச் சொல்ல, கேட்கக் கேட்கத் தெவிட்டாத தேவாமிர்தமாயிருக்கின்றன, பக்தர்களுக்கு—ஆம், கிருஷ்ண பக்தர்களுக்கு, இதுதான் ஸ்ரீஜயந்தியின் அற்புதக் கதை.

இக் கதையைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் சொல்லும் பெரியாழ்வார் பாசுரங்களோ, ரஸிகர்களுக்கெல்லாம் ரஸமாயிருக்கின்றன,—பகலில் உள்ளபடி உபவாசம் செய்து இரவில் சாப்பிடும் ஸ்ரீ ஜயந்தி-விருந்து போலவே. ஆம்; 'செவியுள் நாவின் சுவைகொண்டு' அனுபவிக்கவேண்டிய விருந்து இக் கவிதை. கண்ணால் காண்பதுபோல மனக் கண்ணால் கண்டு, எதிரே நின்று

காட்டுவதுபோலவும், பேசுவது போலவும் ஓசை நயத்தோடு பாடிய இப்பாடல்களைப் பாடிப் பாடிச் செவி-விருந்தாக அனுபவிக்கவேண்டும்.

கவிதானுபவமும் பக்தியனுபவமும் கலந்து செய்த அற்புதம் இந்த ஸ்ரீஜயந்திக் கவிதை. ரஸிகத்தன்மையோடு பக்தியுமுள்ளவர்கள் பாக்கியசாலிகள். ஏனென்றால் பெரியாழ்வார் கொண்டாடிய அதே ஸ்ரீஜயந்தியை அவர்களும் அப்படியே அற்புதமாய்க் கொண்டாடி ஆனந்தம் அடையக்கூடுமல்லவா?

---

குகப்ரியை

# ஆடியின் அபூர்வம்

ஆடி மாதத்திலே சூரியன் தக்ஷிணாயனத்தில் பிரவேசிக்கின்றான். கிரீஷ்ம ருதுவின் கொடுமை கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து. வர்ஷ ருதுவின் வருகைக்கு உரிய சின்னங்கள் தோன்ற ஆரம்பிக்கின்றன. சில மாதங்களில் சிற்சில விசேஷங்கள்தானுண்டு. ஆடியோ, பயிரிட்டு வாழும் குடியானவன், கற்பனை உலகிலே சஞ்சரிக்கும் கவிஞன், எம்பெருமானிடத்திலே ஈடுபட்டு நிற்கும் பக்தன் முதலிய எல்லோராலும் கொண்டாடப்பெறும் பெருமையைத் தாங்கி நிற்கிறது.

ஆடி பிறக்கும்பொழுதே பண்டிகையோடு பிறக்கிறது. ஆடிப் பண்டிகை கொண்டாடப்படாத வீடுகள் தமிழ் நாட்டில் இல்லை. அதிலும் முக்யமாய் புதியதாய் விவாகம் செய்தவர்கள் மணமகனை அழைத்து விருந்திட்டு உபசரிப்பார்கள்.

கேரள நாட்டிலே, மகர சங்கராந்தியைப்போலவே கடக சங்கராந்தியும் கொண்டாடப்படுகிறது. தமிழ் நாட்டிலே பொங்கல் பண்டிகையை விமரிசையாய்க் கொண்டாடுவதுபோல அங்கே கடக சங்கராந்தி ஆடி பிறந்தவுடனே காற்று 'ஆடிக் காற்று' என்று பெயர் பெற்ற காற்று வீசத் தொடங்கும். அதன் பயனாக வெயிலின் கொடுமை குறைகிறது. அதன் பொருட்டே விழாவாகக் கொண்டாடுகிறோம் அந்த ஆனந்தத்தை என்று சொல்வதும் உண்டு. தை தொடங்கி ஆடி வரை பண்டிகைகள் அதிகம். அதன் தொடக்கமாகவே அமைந்திருக்கிறது ஆடிப் பண்டிகை என்றும் சிலர் சொல்வார்கள். மற்ற மாதங்களுக்கில்லாத ஒரு தனிப் பெருமை ஆடிக்கு உண்டு. அது எது? ஆடி மாதத்தைப்பற்றிப் பல பழமொழிகள். ஆடி பயிரிடுவோருக்கு மிகவும் முக்யமான ஒரு மாதம். தூற்றல் விழவேண்டியது. ஏரைத் தூக்கிக்கொண்டு கிளம்பிவிடுவார்கள். ஆடிப் பட்டம் தேடி விதை.

ஆடி ஒரு த்தூழி அவரை, கார்த்திகை ஒரு சட்டி கறி, என்றெல்லாம் பல பழமொழிகள் அவர்களுக்குத் தெரியும். சாதாரணமாக வழக்கிலே, 'ஆடிக் காற்றுத் துரும்புபோல, என்றும், அம்மியும் குழவியும் ஆடிக் காற்றில் பறக்கையில் இலவம் பஞ்சு என் கதி என்ன என்றதாம், என்பன போன்ற பழமொழிகளை உபயோகிக்கிறோம். இப்படி எண்ணிறந்த பழமொழிகள் ஆடியை அழகு செய்கின்றன.

இதுமட்டுமல்ல. பெரும்பான்மையான காவியங்கள், அதிலும் சிருங்கார ரஸப்பிரதானமான நூல்கள் ஆடி மாதத்திலே தொடங்குவதையோ, குறிப்பதையோ காண்கிறோம். வேனிற் காலத்தில் தலைவன் போருக்கோ, பொருளீட்டவோ செல்வான் மாரிக் காலத்திற்குள் வந்து விடுவதாகச் சொல்லி. சொன்ன சொல்லைக் காக்கமுடியவில்லை. அவனைக் காட்டிலும் படுவேகமாக ஓடி வந்துவிடுகிறது ஆடி மாதம் தேரின்மேல் ஏறி வந்து கொண்டிருக்கின்ற அவன் மனம் என்ன நிலையிலிருக்கிறது. ஆகாயத்திலே செல்லும் மேகங்களைப் பார்க்கிறான்.

தேரோ வாயு வேகத்திற்குமேல் செல்லுகிறது. ஆனால் என்ன? மேகத்துடன் போட்டிபோட முடியுமா? தன்னைவிட வேகமாய்ச் செல்லும் அந்த மேகம் அவளை முன்பே கண்டுவிடுமல்லவா? ஆகவே அதையே தூது விடுகிறான்.

ஓடுகின்ற மேகங்காள்! ஓடாதேரில்-வெறும்
கூடுவருகு தென்று கூறுங்கோள் என்கிறானும்.

என்ன கவிதை! என்ன அற்புதம். மனம், உயிர், உணர்வு. எல்லாம் அவளையே அடைந்துவிட்டதாம். வெறும் கூடுதான் மீதியாம். ஆடிக் காற்றிலே அவை ஓடும் அற்புதத்தை வர்ணிக்க இதைக் காட்டிலும் சிறந்த உவமை சொல்லமுடியுமா? மேகம் செல்லும் வேகத்தின் முன் இவனது தேர் நிற்பதுபோலவே தோன்றுகிறது. காற்றின் வேகத்தையும் தலைவனது மனோபாவத்தையும் படம் பிடித்துக் காட்டுகின்றன இந்த வரிகள்.

தமிழ் இலக்கியத்திலே தூது என்பது ஒரு தனிப் பிரபந்தம். இவற்றுள் பெரும்பான்மையானவை, காதலன்காதலிக்கும் காதலி காதலனுக்கும் தூது விடுவதையே பேசும்.

தூது விடுபவர்களுக்கு எதிரிலுள்ளவைகளைப்பற்றிச் சிந்தையே இராது. நாம் தூது விடுகின்றோமே. சரியானபடி குறித்த இடத்திற்குத் தகவல்போய்ச் சேருமா? என்பதைப்பற்றி அவர்களுக்குக் கவலையே இராது. அப்படிப்பட்ட ஒரு காதல் பைத்தியம் அல்லது பக்திப் பைத்தியம். சிலர் வண்டைத் தூது விடுவார்கள். சிலர் கிளியைத் தூதனுப்புவார்கள். சிலர் சந்திரனையே தூதனுக்கிவிடுவார்கள். சத்திமுத்தப் புலவர் என்பவர் விடுத்தது 'நாரைவிடு தூது'. சமீபகாலத்துப் புலவர் ஒருவர் 'புகையிலை விடு தூது' என்றொரு பிரபந்தம் இயற்றியதை, தமிழ்த் தாத்தாவாகிய ஸ்ரீ. உ. வே. ஸ்வாமிநாதய்யர் அவர்கள் பாராட்டி வெளியிட்டார்.

இதே துறையில் ஞான சம்பந்தர் முதலிய பக்தர்கள் மனதையே தோழியாக்கி எம்பெருமானிடம் தூது செல்லவிடுப்பார்கள். பக்தி உலகிலே ஏராளமான தூதுகள் இன்னும் நாம் பார்க்கிறோம். தூது அனுப்பத் தகுந்த மாதம் ஆடி மாதம் என்பதை வற்புறுத்துவதேபோல் காளிதாஸ மகா கவி தமது 'மேக ஸந்தேசம்' என்கின்ற மகா காவியத்தை ஆஷாட மாதத்திலே, மேகத்தின் வர்ணனையோடு தொடங்குகினார். ஆகவே காவிய உலகிலே ஆடி மாதம் ஒரு உயர்ந்த இடம் பெறுகின்றது.

* * * * *

"நிறுத்துங்கள் கலியாணத்தை, எனக்குப் பதில் சொல்லிவிட்டுத்தான் தாலி கட்டவேண்டும்" என்று கம்பீரமாய்க் கேட்கிறது ஒரு குரல். பந்தலிலிருந்தவர்கள் விலவிலத்துப்போனார்கள். மேளம், தாளம், வேத கோஷம், எல்லாம் நின்றுவிட்டது. "என்? என்றார்க்கு என்? என்? என்றார் எய்

தியது அறிந்திலாதார்'' என்று கம்பர் சொன்னதுபோல, என்னவென்றே விளங்கவில்லை மற்றவர்களுக்கு.

“நடுக் கலியாணத்திலே யாரடா வந்து தடுக்கிறவன்,'' என்று கூச்சலிட்டான் மணமகன். தொண்டு கிழவர் ஒருவர் ஓலைச்சுவடியும் கையுமாய் எதிரே நிற்கிறார். எல்லோரையும் ஒரு முறை சுற்றிப் பார்த்துக்கொண்டு “நீ எனக்கு அடிமை. என் விஷயத்தை ஒழுங்கு செய்துகொண்டு பிறகு தான் கலியாணம். இதோ பார் நீ எழுதிக்கொடுத்த முறிச்சீட்டு. இது நகல். அசல் திருவெண்ணெநல்லூர்க்கோயிலில் இருக்கிறது; வந்து பார்த்துக் கொள்'' என்கிறார்.

“சீ! சீ! இவன் பித்தன். நானாவது அடிமையாவது, துரத்துங்கள் இவனை'' என்று கூச்சலிடுகிறான் மாப்பிள்ளை.

நடுக் கலியாணத்திலே தகராறு வந்தால் வேறு வழி என்ன ? கிழவர் முன்னே கம்பீரமாய்ச் செல்ல, திட்டிக்கொண்டே பின் தொடர்கின்றான். அவன் கோயிலருகில் வந்தவுடன் பித்தனான கிழவன் மறைந்துபோகிறான்.

இந்தக் காட்சியை இன்றும் திருவெண்ணெநல்லூரில் காணலாம். இந்த மணமகன் யார்? “பித்தா! பிறைசூடி!”என்று தொழுத அந்தச் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தடுத்தாட்கொண்ட காட்சிதான் இது. இதன்பின் அவருக்குக் கேட்டதையெல்லாம் கொடுக்கிறார் சிவபெருமான். ஒரு ஆற்றிலே பொன்னைப்போட்டு மற்றொரு ஆற்றிலே எடுத்துக்கொடுக்கிறார். சங்கிலி நாச்சியாருக்காக மகிழ மரத்தடியில் ஒளிந்துகொள்ளுகிறார். ‘இறைவன் தொண்டர்உள்ளத்து ஒடுக்கம்’ என்பதுபோல், நம்பியாரூரனை அடிமை என்று முறிச்சீட்டைக் காட்டி வாது செய்த சிவபெருமான் தானே அவனுக்கு அடிமையாகிப் பணித்த பணியைச் செய்கின்றாராம்! என்ன ஆச்சரியம்! இத்தகைய அற்புதங்களைச் செய்த சுந்தரமூர்த்தியின் திருநட்சத்திரம் ஆடி மாதத்திலேதான்.

* * * * *

‘பதினெட்டாம்பெருக்கு’ ஆடி மாதத்துப் பண்டிகைகளுள் சிறந்தது. பகலில் உயர்ந்த விருந்து. சாயங்காலத்தில் பெண்கள் தங்களை விதவிதமாய் அலங்கரித்துக்கொண்டு சிரிப்பும் களிப்புமாய் ஆற்றங்கரைக்குச் செல்லுவார்கள். மழைகாலத்தின் தொடக்கம் என்பதற்கு அறிகுறியாக ஆற்றிலே புதிய வெள்ளம் கொப்பும் நுரையுமாய் மலர்களையும் சருகுகளையும் சுமந்து கொண்டு உல்லாசமாய்ப்போகும். சிறுவர்களும் சிறுமிகளும் துறைகளிலே உட்கார்ந்து தண்ணீரில் அளைந்தும் ஆடியும் பாடியும் மகிழ்வர்.

அந்திவானத்தின் முழு சௌந்தர்யமும் அந்த நீரிலே பிரதிபலிக்கும். குயில்களும், வானம்பாடிகளும், காகணவாய்ப் பக்ஷிகளும் குளிர்ந்த காற்றினால் உடல் புளகித்து இன்னிசை எழுப்பும். அந்தி நேரமும் ஆறும், பக்ஷிகளின் கீதமும், சிறுவர் சிறுமியரின் கோலாகலமும் சேர்ந்து இது மண்ணுலகமா ? அல்லது விண்ணுலகமா ? என்று மனிதரை மயங்கச்செய்யும்.

முதிய பெண்மணிகள் முகத்திலே முறுவலும் அகத்திலே மகிழ்ச்சியும் பொங்க, கால் மெட்டிகள் கல்கல் என்று ஒலிக்க விதவிதமான தின்பண்டங்களைச் சுமந்துவந்து பரிமாறத் தொடங்குவார்கள். பக்ஷணங்கள் புளியோரை, ததியோதனம், பொங்கல், பூரி, தோசை, அப்பளம் வறுவல், வற்றல், வடகம் இவைகளின் வாசனை நாற்புறமும் வீசத் தொடங்கும்.

சிலர் படித்துறைகளை தண்ணீரால் கழுவி அதிலே இலையைப் போட்டுக்கொள்வார்கள். சிலர் தண்ணீரில் கால்களைத் தொங்கவிட்ட

வண்ணம் உட்கார்த்து கைகளிலேயே இலைகளை வந்திப் புசிப்பார்கள். அணில்களும், காக்கை குருவிகளும் 'சம உரிமை' கேட்கும், குரங்கோ சர்வாதிகாரிபோல் வலிய வந்து கூடையோடு கொள்ளையிடும். இவற்றை விரட்டுவதற்காகப் பாட்டிமார்கள் தங்கள் கழிகளை வெகுத் திறமாய் வைத்துக் காத்திருப்பார்கள்.

இந்த ஆனந்தம் குழந்தைகளுக்குமட்டுமன்று, பெரியவர்களும் மெய் மறந்து குழந்தைகளோடு குழந்தைகளாய் சாப்பிட்டும் ஓடி விளையாடியும் மகிழ்வார்கள். இந்தக் காட்சியை இன்றும் நமது நாட்டுப்புறங்களின் ஆற்றங்கரைகளிலே காணலாம். கண்டால் நகரவாசிகள் சட்டாயம்பொறாமைப் படுவார்கள். அப்படிப்பட்ட அற்புதக்காட்சி அது.

* * * * *

தென்னாட்டுத் திருக்கோயில்களில் ஆடிப்பூர உத்ஸவம் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. சிவாலயங்களிலே ஆடிப்பூரத்தில் வளைகாப்புத் திருநாள் கொண்டாடுகிறார்கள். இந்த விழா, திருவண்ணாமலை, திருப்பாதிரிப்புலியூர் முதலிய இடங்களிலே விசேஷம். ஊரிலுள்ள பெண்கள் அனைவருக்கும் இலவசமாக வளையல்கள் கொடுப்பார்கள். முன் தினமே மங்களஸ்நானம் செய்துவருவதன்பொருட்டு எண்ணெய் சீயக்காய், வாசனை த்ரவ்யங்கள் முதலியவைகளைக் கொடுத்து அழைப்பார்கள்.

மறுநாள் குளக்கரையிலுள்ள மண்டபத்திற்கு தேவி எழுந்தருளி வந்தவர்களுக்கும் வளை அடுக்கி, தானும் அணிந்துகொள்வாள். இந்த விழாவை ஒரு புனிதமானதென்றும், இதிலே எதைச்செய்தாலும் ஒன்றுக்கு நூறு பலன் தருமென்றும் சொல்வார்கள். ஆகவே வளைகளை விலைக்கு வாங்கி ஊராருக்கு விநியோகிப்பதும் உண்டு.

ஆனால் இந்த ஆடிப்பூரம், அம்பிகையின் பிறந்த நாள் என்றே பல கோயில்களில் கொண்டாடப்படுகிறது. ஆடிப்பூரத்திலேதான் அவதரித்தாள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாகிய ஆண்டாள். ஆடி மாதத்திற்கே அழியாச் சிறப்பைக் கொடுத்து ஆடிப் பூர பண்டிகை விவாக மகோத்ஸவத்தை யளித்துள்ள பெருமை அந்த கோதை நாச்சியாருக்கே உரித்ததாகுமல்லவா! ஆடி மாதம் என்று நினைக்கும்போதே திருத்துழாய் வனத்தில் அவதரித்து எம்பெருமானையே மணந்த அந்த ஆண்டாளை நினைக்காதிருக்க யாரால்தான் முடியும்?

"திருவாடிப்பூரத்தில் உதித்தாள் வாழியே!" என்று வாழ்த்துகிறார்கள் ஆண்டாளை. "பெண் குலத்தின் வெற்றியை உலகிற்கு அளித்த பெருமை எனக்கே சேரும்" என்கிறது ஆடி மாதம். 'ஏன்? சந்தேகமென்ன? சூடிக் கொடுத்தவள் அவள். அவளைக் கொடுத்தது நான்?' என்கிறது.

ப்ரபந்த உலகத்திலேயே தனிச் சிறப்பு பெற்று விளங்கும் அழியாத ஜீவன் ததும்பும் பாமாலை திருப்பாவை தான் என்று பெரியார்கள் கூறுகிறார்கள். அதுடன் "நாச்சியார் திருமொழி"யையும் அளித்த ஆண்டாளின் பெருமையைப்பற்றி விவரிக்கவோ தனியே சொல்லவோ வேண்டியதில்லை. மார்கழி நோன்பு முதல் ஒவ்வொரு மாதத்திலும் அவளுக்கு ஒரு தனியிடம் உண்டு. அதுபோலவே, பக்தி உலகிலும், இலக்கிய உலகிலும், மக்களது நெஞ்சிலும் அவளுக்கு ஒரு உயர்ந்த ஸ்தானம் உண்டு. அப்படியிருக்க அவளைப்பற்றி நான் உங்களிடம் விவரிப்பானேன். பெண்களைப்பற்றியே பெண்கள் பேசுவார்கள் என்ற நிந்தைக்கு இடம் கொடுப்பானேன்?

வை.மு.கோ.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 AUG 1942
MADRAS




8

# ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்

## மகாத்மாவின் தரிசன்

"உலகம் போற்றும் உத்தம தியாகமூர்த்தியான மகாத்மா காந்தியடிகள் மைலாப்பூரில் ஸ்ரீ S. ஸ்ரீனிவாஸய்யங்கார் கிரகத்தில் இறங்கியிருக்கிறாராம். நாங்கள் அந்த தாய ஸ்வரூபத்தை தரிசிக்கப்போகிறோம். நீயும் வருகிறாயா?' என்று என் சிநேகிதர்கள் என்னைக் கேட்டார்கள். கரும்பு தின்பதற்குக் கூட கூலி கேட்பார்களா! மகாத்மாவை தரிசிக்கவேண்டும் என்று கோடிக் கணக்கான மனிதர்கள் தவிக்கையில் அவரை தரிசிக்க மார்க்கம் கிடைத்திருக்கையில் விட்டுவிட மனம் வரவில்லை. ஆனால் ஸ்ரீ. ஸ்ரீனிவாஸ ஐயங்கார் வீடு என்றால் மிகுந்த பணக்காரராயிற்றே! என்கிற யோசனை சிறிது உண்டாகியது. ஏனெனில் சில பணக்காரர்களின் நடையுடை பாவனைகளைக் கண்டு உள்ளூற எனக்குப் பயமே உண்டு. அழையாத வீட்டிற்கு நுழைகிற சம்மந்திபோல் எப்படிப்போவது, அவர்கள் எப்படி இருப்பார்களோ!' என்றெல்லாம் பலமான யோசனை உண்டாகியது.

"அவரது மனிதர்களை நீ பார்த்ததே இல்லையா! அவர்கள் மிகவும் நல்லவர்கள். அவர்கள் குணம் உனக்குத்தெரியாது. ஸர். வி. பாஷ்யமய்யங்காரின் பெண்தான் ஸ்ரீமதி. ஸ்ரீனிவாஸ ஐயங்கார். அந்த இடத்தில் நீ நினைப்பது போல் செல்வச்செறுக்கு சிறிதும் கிடையாது. மகா குணசீலர்கள். நீ வா! தயங்கவேண்டாம். பிறகு நீயே பிரமிப்பாய்" என்று கூப்பிடவந்தவர்கள் சொல்லியதால் நாங்களும் கூடச்சென்றோம். அப்போது எனக்கு காங்கிரஸ் என்றாலே என்னவென்று தெரியாது. தேசபக்தி வீசை எப்படி என்று கேட்கும் கோஷ்டியில்தான் நானும் இருந்தேன். சரிகைப்புடவையும், கமல நகைகளுமாகச் சென்றால் மகாத்மா பரிகஸிப்பாரே என்றும் தோன்றியது. எதற்கும் முதலில் தரிசனம் செய்யும் பாக்யமாவது கிடைக்கட்டும் என்று எண்ணி ஐயங்கார் வீட்டிற்குச் சென்றோம். மகாத்மாவையும் அவரது தர்ம பத்தினியையும் தரிசிக்கும் பாக்யம் பெற்றோம்.

## முதல் சந்திப்பும் முதிர்ந்த அன்பும்

என்னைப்போலவே ஸ்ரீ ஐயங்காரின் அருமைப் புதல்வியான ஸ்ரீமதி S. அம்புஜம்மாளும் பட்டுப்புடவை சகிதந்தான் காக்ஷி கொடுத்தார். பணக்காரர்கள் என்கிற செறுக்கு லவலேசமும் இன்றி ஸ்ரீமதி ஐயங்காரும் அம்புஜம்மாளும் எங்களை அன்புடன் வரவேற்றுப் பேசிய அதிசயம் என் மனத்தில் இப்போதும் கொந்தளிக்கின்றது. பணக்காரர்களிடம் எனக்கிருந்த பயம் அன்றே போய்விட்டது.

ஸ்ரீமதி அம்புஜம்மாளை அப்போதுதான் முதல் முதல் நான் பார்த்தது. அதன்பிறகு அப்போதைக்கப்போது எங்கேனும் பார்த்ததுண்டு. ஆனால் அதிகப் பழக்கமில்லை. 1929-ல் சுதேசி லீக் என்று ஒரு சங்கத்தை ஸ்ரீமதி அம்புஜம்மாள் ஆரம்பித்தபோது அதில் நானும் ஒரு அங்கத்தினராகச் சேர்ந்த பிறகுதான் அவரிடம் நெருங்கிய பழக்கம் உண்டாகியது. பல வருஷங்களுக்குமுன் அவருடைய வீட்டில் நான் பார்த்த அம்புஜம்மாள் வேறு, இப்போது பார்க்கும் அம்புஜம்மாள் வேறாக முற்றிலும் கதர் மயமாய் தேச சேவையின் தேஜஸ் முகத்தில் தாண்டவமாட புத்துயிர் பெற்றவர்போல் காணப்பட்டார்கள். தேசபக்தியே இல்லாதிருந்த பெண்கள் கூட்டம் அக்காலையில் ஆடு மாடு மந்தைபோலிருந்தது. திருவல்லிக்கேணியிலேயே இச்சங்கத்தை ஆரம்பித்து வெகு நன்றாக நடத்தி தேசபக்தியை அனேக பெண்மணிகளுக்கு உண்டாக்கி அதன்மூலம் தேச சேவிகைகளை வெகு திறமையுடன் சேர்த்து மறியல் செய்யவும், சிறைச்சாலைக்குச் செல்லவும் செய்த பெருமை அம்புஜம்மாளுக்கே உரித்தாகும். வீண்வம்பு பேசி காலத்தையோட்டிய பெண்கள் சிறந்த தேச சேவிகைகள் ஆனது வியப்பிலும் வியப்பல்லவா!

அம்புஜம்மாளுடன் பிரசாரத்திற்குப் போவதென்றால் எல்லோருக்கும் ஒரு தனிப் பெருமையாகவே தோன்றும். அம்புஜம்மாளுடன் சிறைச்சாலையில் இருந்த காலத்தில் அவரிடம் அனேக பெண்கள் ஹிந்தி, இங்கிலீஷ், சம்ஸ்க்ருதம் முதலியவை கற்பார்கள். அதிலிருந்து அவருக்குள்ள கல்வியின் திறமையை நன்குணரலாம்.

## கல்வியறிவும் தயாள நெஞ்சமும்

அவர் ஆதியில் சாரதா வித்யாலயத்தில் பிரத்யேகமாக தமிழ் படித்து அதில் பாண்டித்யம் அடைந்ததற்காக ஒரு தங்கப் பதக்கமும் பரிசாகப் பெற்றிருக்கிறார்கள். ஹிந்தியில் அவர்களுக்குள்ள ஆர்வம் அவர் ஹிந்தியிலிருந்து, துளஸிராமாயண காவியத்தை வெகுதிறமையுடன் மொழிபெயர்த்திருப்பதும், சேவாசதனம் என்கிற ஹிந்தி நாவலைத் தமிழில் மொழிபெயர்த்திருப்பதுமே சான்றாகும். தாம் மட்டும் கற்று இன்புறுவதோடு விடாது, இந்து மாதர் சங்கத்திலும், மைலாப்பூர் லேடீஸ் க்ளப்பிலும் ஹிந்தி வகுப்புகள் வைத்து அதில் தானே ஒரு உபாத்தியாயினியாக விருந்து பல பெண்களுக்கு கற்றுக்கொடுத்து அவர்களை பரிக்ஷைகளிலும் தேறும்படிக்குச் செய்துள்ளார். இந்த அபூர்வ சேவை பெண் குலத்திற்கே பெருமை கொடுப்பதுபோன்றதல்லவா!

கல்வியில் மட்டுந்தான் திறமை என்றில்லை. சங்கீதத்திலும் பரிச்சயமுடையவர். வீணை வாசித்துப் பாடினால் பக்திரஸம் ததும்பும். துளஸிதாஸர் காவியங்களையும், பாரதியார் பாடல்களையும் பாடும்போது அந்த பாடல்களின் உணர்ச்சியும் ஸாரமும் ததும்பி நிற்கும். அதேபோல் அவர் பொதுக்கூட்டங்களில் மக்களின் மனத்தில் பதியும்படிக்கும், நல்ல பொருட்சுவையுடன் எளிய நடையில் ஆர்வத்துடனும் அழகாயும், பேசுவார்.

இந்து மாதர் சங்கத்தில் காரியதரிசியாகவும், மைலாப்பூர் லேடீஸ் கிளப்பில் பல முறை பொக்கிஷதாரராகவும், காரியதரிசியாகவும் இருந்திருக்கிறார். உத்ஸாகத்துடன் அவ்விரண்டு சங்கங்களிலும் உழைத்து வருகிறார். க்வீன் மேரீஸ் காலேஜ் அட்வைஸரி கமிட்டியிலும் மெம்பராக இருக்கிறார்.

அம்புஜம்மாளின் தயாளத்தனமும், பரோபகார சிந்தையும் ஏட்டில் எழுதி முடியாது. ஏழைகள் நிறைந்த குப்பங்களிலும், சேரிகளிலும் தாமே நேரில் சென்று அந்த பரிதாபகரமான ஆத்மாக்களின் வறுமையறிந்து துணிகளாகவும், இதர சாமான்களாகவும் சேகரித்து உதவிசெய்து வருகிறார்.

தனது சிரமத்தை ஒரு சிறிதும் பார்க்காமல் உழைப்பதில் சலிக்காதவர். தற்சமயம் பர்மா, மலேயா முதலிய இடங்களிலிருந்து சண்டையில் தப்பி வரும் (எவாக்வீஸ்) ஜனங்களுக்கு இரவு பகலாக ஓடி ஓடி பாடுபடுகிறார். தம்மாலான உபகாரங்கள் பலருக்குச் செய்கிறார்.

## தியாக சிந்தையும் சில குணமும்

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல் அவருடைய தியாக புத்தியும் சில குணமும் அப்பழுக்கற்ற தூய-எளிய வாழ்க்கையும் குறிப்பிடத்தக்கவை. தனது அருமைத் தகப்பனார் ஸ்ரீ S. ஸ்ரீனிவாச ஐயங்கார் காலமாகிய பிறகு மகாத்மாவின் தரிசனத்திற்காக வார்தாவுக்குச் சென்று ஆதியில் தான் அணிந்திருந்த ஆபரணங்கள் அத்தனையும் அப்படியே கொண்டு போய் கொடுத்துவிட்டு "இதைப் பெற்று என் தந்தையின் பெயரால் ஏதாவதொரு தர்ம கைங்கரியத்திற்கு உபயோகப்படுத்தவேண்டும்" என்றுகேட்டுக் கொண்டார்களாம். என்னே தியாகபுத்தி. என்னே தருமத்தின்மீது அன்பு.

பெண்களுக்கு ஒரு கூழாங்கல்லை தங்கத்தில் மறைத்து இது ஒரு பூஷணமென்றால் ஆசையுடன் பூட்டிக்கொண்டு நிற்பார்கள் என்பது பழமொழி. ஏற்கெனவே பல வருஷங்களாக பூஷணங்களை விலக்கி வெறுத்திருந்ததோடு அப்படியே தர்மத்திற்குத் தன் கரத்தினாலேயே கொடுத்து இன்புறுவதானது, சாமான்யமான காரியமா! அதிலும் மகாத்மாவிடமே கொடுப்பதற்கு பாக்யம்வேண்டாமா! சுமார் 15 ஆயிரம் ரூபாய் மதிக்கத்தக்க அந்த நகைகளை மகாத்மா அங்கீகரிக்கும்போது அம்புஜம்மாளின் பரிசுத்த இதயத்தைக் கண்டு பூரித்திருக்கமாட்டாரா!

மகாத்மா காந்தியை தெய்வமாக மதித்துக் கொண்டாடித் தொழும் தூய இதயத்தையுடையவர். மகாத்மாவுக்கு அம்புஜம்மாளிடம் அளப்பரிய அன்பு உண்டு. "அம்புஜம்!" என்று மகாத்மா கூப்பிட்டுப் பேசுவதிலேயே ஒரு தனித்த வாத்ஸல்யத்தைக் கண்டு நான் பூரித்திருக்கிறேன்.

சின்ன சின்ன தர்மங்கள் பற் பல செய்கிறார்கள். அந்த தர்மமெல்லாம், அவருடைய பர்த்தாவையும், ஏக புத்திரனையும் தலைகாக்கவேண்டும்.

பலருக்கு அதிர்ஷ்டவசமாகப் பணம் அமைந்துவிடும். குணம் அமையாது. இரண்டும் அமைந்தாலும் தக்க முறையில் செலவிடும் ஆற்றல் வேண்டும். ஸ்ரீமதி அம்புஜம்மாளிடம் சகலமும் நிறைந்து அமைந்திருப்பதுதான் போற்றற்குரியது. ஏழை பணக்காரர், உயர்வு தாழ்வு என்கிற வித்யாசமே இல்லாத சம த்ருஷ்டியுடையவர். கோபம் என்பதை நான் அவரிடம் கண்டதே இல்லை. இது வெறும் முகஸ்துதியல்ல. அம்புஜம்மாள் வராவிட்டால் லேடீஸ் க்ளப்பில் கலகலப்பே, உத்ஸாகமே இல்லையே என்று அங்கத்தினர்கள் சொல்வதை நேரில் கேட்டிருக்கிறேன்.

## அறிவாளிகள் போற்றும் ஆசிரியத்தன்மை

அவரது பேனுத்திறத்தைப்பற்றி நான் புதிதாகச் சொல்ல வேண்டியதே இல்லை. அவருடைய ஆசிரிய தன்மையை நமது மோகினியில் கண்டு களித்திருக்கிறீர்கள். மோகினியிடத்தில் அவருக்குள்ள அன்பைக்கண்டு என்னுள்ளம் பூரிக்கின்றது.

அவருடைய ஹிந்தி மொழிபெயர்ப்பில் அதிலுள்ள சுவை ஒரு அணுவளவும் குறையாமல் சோபிக்கின்றதைக் கண்டு ஸ்ரீமான் பி. ஸ்ரீ. ஆச்சார்யா அவர்கள் வியந்து தமிழுக்கே பெருமை கொடுக்கும் முறையில் அம்புஜம்மாளின் தமிழ் நடை அமைந்திருக்கிறதென்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. ஹிந்திப் பிரசார சபையின் சார்பாக வட இந்தியாவில் பல முக்யமான ஊர்களுக்கு சுற்றுப் பிரயாணம் செய்திருக்கும் மகிமை ஒன்றே அவரது ஹிந்தி பாஷா ஞானத்தை நன்கு காட்டவில்லையா!

இத்தகைய சிறந்த மேதாவியையும் பரிசுத்தவதியையும்பற்றி எழுதும் பாக்யம் கிடைத்ததுபற்றியும், அத்தகைய ஸ்திரீ ரத்தினத்தை எனது ஆப்த சிநேகிதையாகப் பகவான் அளித்ததற்கும், நான் மிக்க சந்தோஷத்தை அடைகிறேன்.

---




## திருப்பதி யாத்திரை

'வை. மு. ஸ்ரீ.'

### 9

வெளி ப்ராகாரத்தில் நாங்கள் உட்கார்ந்த இடத்திலிருந்து பார்த்தால் ஆனந்த நிலய விமானம் எனப் போற்றப்படும் விமானம் மிக தேஜஸ்ஸுடன் ஜொலிப்பது நன்றாகத் தெரியும். "கோபுர தரிசனம் பாபவிமோசனம்" என்றதன் பிரகாரம் அதையே பார்த்துக்கொண்டு அதனடியில் கம்பீரமாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமானிடமே மனதை லயித்து உட்கார்ந்திருந்ததால் பக்கத்திலிருந்தவர்களுடன் ஒன்றும் பேசவில்லை.

உலகம் பலவிதம் என்பது எப்பேர்ப்பட்ட உண்மையென்பது அப்போது நன்கு தெரியவந்தது. சந்நிதியில் கூட்டமாகவிருக்கிறதேயென்று வெளியில் காத்திருந்த ஒரு கோஷ்டியினரின் சம்பாஷணை காதில் விழாமலில்லை. "மாஸ்கோவுக்கு எவ்வளவு தூரத்திலிருக்கிறான், சார்?" என்று ஒருவரும் "பின்லாந்து தனியாக சமாதானம் செய்துகொண்டு விடுமா, சார்!" என்று ஒருவரும் பேசிக்கொண்டிருந்தது என் காதில் நாராசம்போல் விழுந்தது. (அப்போது ஜப்பானிய யுத்தம் ஆரம்பிக்கவில்லை. ரஷ்யோ ஜர்மன் யுத்தம்தான் நடந்துகொண்டிருந்தது. ஸெப்டம்பர் 1941.) பகவத் சந்நிதானத்திற்குள்ளேயும் இதே பேச்சுதானு பேசவேண்டும்! நானென்ன செய்யமுடியும்? அவ்விடத்தைவிட்டகன்று உடையவர் சந்நிதி யருகில் உட்

கார்ந்தேன். அவர் இந்த திவ்ய ஸ்தலத்தின் மகிமை சம்பந்தமாக சில அற்புத லீலைகள் புரிந்திருப்பதாக ஒரு கதை உலாவி வருவது அப்போது நினைவுக்கு வந்தது. அது எவ்வளவு தூரம் உண்மையென்று யாருக்கும் திட்டமாகத் தெரியாது. அதை ஒரு ருசிகரமான கதை யென்றும், அது உலவி வருவதற்கும் அந்த எம்பெருமான் தான் காரணம் என்றும் கருதி சும்மாயிருக்கவேண்டியதுதான் என்று தோன்றியது.

சைவ, வைஷ்ணவ பேதமின்றி ஹிந்துக்களில் பல சாராரும் ஹிமயம் முதல் குமரி வரையுள்ள சகல பிரதேசங்களிலுமிருந்து லக்ஷக்கணக்கான ஜனங்கள் பக்தி ச்ரத்தையுடன் வந்து வணங்கும் விசேஷ ஸ்தலமல்லவா இது? எல்லா க்ஷேத்திரங்களிலும் காக்ஷி கொடுக்கும் பகவான் ஒருவரே! இருந்தாலும் இந்த க்ஷேத்திரத்திற்கு ஏன் தனித்த மதிப்பும் விசேஷமும்? இதுவும் அவன் லீலைதான். ஆழ்வார்கள் பாடித் துதித்தது ஒரே பகவானைத்தான். இருந்தாலும் அர்ச்சாவதாரத்தில் எம்பெருமான் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு மாதிரியாகக் காட்சி கொடுக்கிறானல்லவா?

'குன்றமேந்திக் குளிர்மழைகாத்தவன் அன்றுஞாலம் அளந்தபிரான்பரன்
சென்றுசேர் திருவேங்கடமாமலை ஒன்றுமேதொழ நம்வினை ஓயுமே

ஓயும்மூப்புப் பிறப்பு இறப்புப் பிணி வியுமாறுசெய்வான் திருவேங்கடத்து
ஆயன் நாள்மலராம் அடித்தாமரை வாயுள்ளும் மனத்துள்ளும் வைப்பார்கட்கே.'

என்று நம்மாழ்வார் திருவேங்கடமுடையானின் திருவடிகளிலேதான் பிரார்த்திக்கிறார். அவ்வேங்கடவனின் மகிமைக்கோ, கருணைக்கோ எல்லைதான் உண்டோ? என்று மனதை, சாதாரண உலகப்பற்றுள்ள விஷயங்களை விடுத்து எம்பெருமானிடம் செலுத்தியிருந்த சமயம் பழய நண்பரொருவர் தம் குடும்பத்துடன் கோவிலுக்குள் வருவதைப் பார்த்தேன். இதுவும் பகவத் ஸங்கல்பம் தான். தன் சந்நிதானத்தில் வெகு காலமாகப் பிரிந்திருந்த நண்பர்களைக் கூட்டிவைப்பது பகவானுக்கு ரொம்பவும் ப்ரீதி போலும். 'உபய குசலோபரி' நடந்ததும் நண்பர் 'தேள் காசு' விஷயமாக ஒருகேள்வி கேட்டார். "இங்கு மலைமேல் விற்கும் தேள் காசு புதிதாக செய்யப்பட்டதில்லையாமே! ஏற்கெனவே மற்றையோர் காணிக்கையாகச் செலுத்தி உண்டியலிலிருந்து எடுத்து விற்கப்பட்டவை என்கிறார்களே! இதை வாங்கி காணிக்கையாக சமர்ப்பிக்கலாமோ கூடாதோ தெரியவில்லையே! கீழ்த் திருப்பதியில் புதியதாகச் செய்த காசு என்று சொல்லி விற்றார்கள்; வாங்காது வந்துவிட்டேனே!" என்று சஞ்சலப்பட்டார். "பகவானுக்கு எல்லாம் திருவுள்ளம்தான். நாம் தேள் காசையோ அல்லது வெள்ளித் தகட்டினால் செய்யப்பட்ட கண், கால், கை, உடம்பு முதலியவற்றையோ பகவானுக்கு காணிக்கையாக செலுத்தும் நோக்கமென்ன? தேளினாலோ, அல்லது நம் அவயங்களுக்கு ஏதாவது காரணத்தினாலோ கஷ்டம் ஏற்பட்டபோது நமது பிரார்த்தனையைக் கண்டு மனமிரங்கி காப்பாற்றியதன் ஞாபகார்த்தமாக—ஒரு சின்னமாக—இவைகளை நாம் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம். இந்த 'புதியது, பழயது' என்ற பேச்செல்லாம் வியாபார தந்திரத்தைச் சேர்ந்ததே தவிர பகவானுக்கு எல்லாம் ஒன்றுதான். யோசனை செய்யாமல் இங்கேயே வாங்குங்கள்" என்றேன்.

---

பிழை திருத்தம்:—"திருப்பதி யாத்திரை" 8-வது பகுதியில் (பக்கம் 23 மே இதழ்) "உலகமுண்ட பெருவாயா" என்று நம்மாழ்வார் பாடியதில் அதிசய மென்ன? என்பதற்குப் பதிலாக தப்பிதமாக பெரியாழ்வார் பாடியதில் என்று அச்சாகியிருப்பதைத் திருத்திக்கொள்ளவும். —வை.மு.ஸ்ரீ.

## சித்திர ரகளை

# சென்னையில் சங்கு ஊதிய அன்று

எஜமானர்:—நான் அப்பவே முட்டிண்டேனே! சண்டே வலுத்துப் போச்சு, திடீன்னு சங்கு ஊதுவான் ஊதி புடுவான் ஓடும்படியா யிருக்கும் ஒரு வேளை சாப்பியோ சாப்பாடோ! கொரச்சிக்கங்கோன்னு நூறு தரம் சொன்னேன்! கேட்டகளா! சரீரம் ஊதிப் போச்சு, சங்கும் ஊதிப்புட்டான்! ரயிலும் ஊதிடுத்து...க்ரகசாரம் உம்...ஏறு...ஏறு...



வை. மு. கோ

# வாத்ஸல்யம்

அல்லது

# வாக்குதத்தம்

59வது நாவல்

என்ன ! வாத்ஸல்யமா ! யாரி
டத்தில் ? ஆஹா ! வாக்குதத்
தமா ! எவரிடம் ? எதற்காக ?
மனித ஜென்மம் எடுத்த ஒவ்
வொருவரும் தம் மனிதத் தன்
மையை அறிந்து, கடமையை
உணர்ந்து, சத்தியத்திற்கும்,
தர்மத்திற்கும் கட்டுப்பட்டு
நடப்பதுதான் உண்மையான
மனிதப் பிறவியாகும்.

Jaganmohini
-PRESS-

காபிரைட் 1942. ரூ 1/4.



# வாத்ஸல்யம் அல்லது வாக்குதத்தம்



## 1

"உலகளந்த உத்தமா! உன் பாதமே தஞ்சம். உன் சரணல்லாது வேறு கதி எனக்குண்டா! உன்னடியாரின்கோரிக்கைகளை நிறைவேற்றி அழியாத இன்பத்தைக் கொடுக்கும் மங்கள ஸ்வரூபன் நீயல்லவா! என் பிராணபதிக்கு இக் காலத்து நாகரீகத்தின் மோகம் அபரிமிதமாகவிருப்பினும் உன்னைத் தொழவும், உன்னடியார்க்குப் பணி செய்து இன்புறவும் நீ கிருபை செய்யமாட்டாயா! அதைத்தான் நான் வேண்டுகின்றேன். அவருக்கு இச் சிறிய மனமாறுதலைக் கொடுத்து ரக்ஷித்தால் போதும்" என்று சுமார் 40 வயது மதிக்கத் தக்க ஒரு பெண்மணி பகவானின் சந்நிதியில் நின்று மன முருகும் பக்தியுடன் வேண்டித் தொழுவதைப் பின்னாலிருந்து கேட்டுக் கொண்டு வந்த அவளுடைய கணவன், சிரித்துக்கொண்டே "அம்ருதவல்லீ! பேஷ். உன்னுடைய பிரார்த்தனை வெகு விநோதமாகவிருக்கிறதே! 'பணத்தைக் கொடு. காசைக்கொடு; உயர்ந்த அந்தஸ்தைக்கொடு. நகை நட்டுகொடு. புத்திர பாக்யத்தைக்கொடு.பெரிய பங்களாவைக்கொடு' என்றெல்லாம் வேண்டாது, உன் கணவனுக்கு பக்தியைக்கொடு என்று வேண்டுவது புதிய முறையாக இருக்கிறதே! பேஷ்! சபாஷ்! இந்திரா! சந்திரா !... இருவரும் வந்து உங்கள் தாயாரின் நிலைமையைப்

பாருங்கள்'' என்று அழைக்க, அழகே உருக்கொண்டதுபோன்ற இரண்டு ஆரணங்குகள் குதூகலத்துடன் ஓடிவந்தார்கள்.

சந்தோஷத்துடன் பெண்களை நோக்கி "அம்மாவின் ப்ரார்த்தனையைப் பார்த்தீர்களா! எனக்கு நல்ல புத்திகொடுக்கவேண்டுமென்று வேண்டுகிறாள்: எனக்கென்ன இப்போது புத்தி தடுமாட்டமாயிருக்கிறதா!'' என்று கேட்டார்.

சந்திரா:— அப்பா! அம்மாவின் நோக்கத்தைத் தெரிந்துகொள்ளாமல் ஏதேதோ சொல்லி அம்மா மனத்தைப் புண்படுத்துகிறீர்களே! உங்களுக்கு புத்தி தடுமாற்றம் என்று அம்மா சொன்னாள்! நீங்கள் கோயிலுக்கே போவதில்லையே; அம்மாவுடன் சேர்ந்து அடிக்கடிகோயிலுக்குப்போய் ஸ்வாமி தரிசனம் செய்யவேண்டும் என்கிற ஆசையால் அப்படி வேண்டுகிறாள். அது கூடக் குற்றமா அப்பா! எனக்குக் கூடத்தான் நீங்கள் அம்மாவுடன் சேர்ந்து பூஜை செய்யாதது, இதர தான தருமங்களில் கலந்து கொள்ளாதது, கோயிலுக்குப் போகாதது எல்லாம் குறையாகத்தானிருக்கிறது. அம்மாவைச் சந்தோஷப்படுத்தும் கடமை உங்களுக்கு இல்லையாப்பா?

இதைக்கேட்ட நரஸிம்மன்கடகடவென்றுசிரித்துக்கொண்டே "அம்ருதவல்லி! உனக்குச் சரியான வக்காலத்து சந்திரா தான். வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் வெகு நைஸாக என்னையும் ஒரு அமுக்கு அமுக்கி உன்னையும் தூக்கி வைத்து வெகு சமத்காரமாகப் பேசிவிட்டாள். இத்தனை சாமர்த்தியமாக உனக்குப் பக்கபலம் தேடிக்கொண்டிருக்கிறாய்; எனக்கு பக்கபலத்திற்கு யார் இருக்கிறார்கள்? என்னால் உங்களுக்காக வெளி வேஷம் போடமுடியாது. நீங்கள் கோயிலில் சென்று பகவானை வேருடன் அசைத்துவிடும் சக்தி பெற்று நேராக மோக்ஷத்திற்குப் போங்கள். நான் இந்த நரகத்திலேயே கிடக்கிறேன். கோயிலுக்கு தினம் பத்து தரம் போய்விட்டாலே பரம பக்திமான், புனித ஆத்மா! அவனே சொர்க்கத்திற்கு வழி காட்டி, கோயில் சாமியிடம் கொண்டு விடும் சாமி என்றெல்லாம் மூட ஜனங்கள் தீர்மானம் செய்து விடுகிறார்கள். எனக்கு அதில் கொஞ்சங்கூட நம்பிக்கையே இல்லை. தான் பரம பக்தன் என்று பிறர் கண்டு ப்ரமிப்பதற்காகவும் கோயிலுக்கு வந்துள்ளவர்களிடம் வீண் வம்பு பேசுவதற்காகவும், துஷ்ட எண்ணத்தினால் பரஸ்திரிகளைப் பார்ப்பதற்காகவும், கோயிலில் ப்ரஸாதம் கிடைக்குமா என்று வயிற்று ஆத்திரம் பிடித்தும், அனேகர் படாடோபமாகக் கோயிலுக்குப் போகிறார்களே யன்றி உண்மை பக்தியுடன் போய் இதய பூர்வமாக ஸ்வாமி தரிசனம் செய்யும் பக்த சிகாமணிகள் நூற்றுக்கு ஒருவர், இருவர் தேருவதே அரிதுஎன்று தான் நான் தீரமாகச் சொல்லுவேன். ஆத்மார்த்தமான பக்தியுள்ளவன் இந்த வேஷம் போடவும் விரும்பமாட்டான்: அவன் பிறருடைய இம்மாதிரி சொல்லுக்குச் செவி கொடுக்கமாட்டான். என்னை வீணாக இதற்கெல்லாம் தொந்தரவு செய்வதில்

உபயோகமில்லை. உங்களைப் போக வேண்டாமென்று தடுக்காதிருப்பதே உங்கள் பாக்கியமென்று நினைத்துக்கொள்ளுங்கள்." என்று நீண்ட ப்ரஸங்கம் போல் கூறினர்.

சந்திரா:—ஏம்பா! எல்லோருக்குமே நீங்கள் சொல்வதுபோன்ற ஆத்மார்த்த ஞானம் பிறந்துவிட முடியுமா! நூற்றில் ஒருவர் அப்படியிருந்தால் மற்ற தொண்ணூற்று ஒன்பது பேர்கள் மனத்திலும் தெய்வ பக்தியும் தூய்மையும் உண்டாவதற்காகத்தானேப்பா சாக்ஷாத் கடவுள் அர்ச்சாவதாரத்தில் கோயில்கொண்டு தம்தம் குழந்தைகளிடம் தமது நிகரிலாத அன்பையும் ஆர்வம் நிறைந்த அற்புதமான வாத்ஸல்யத்தையும் மழை போல் பொழிந்து வருகிறார். அந்த திவ்ய மங்கள மூர்த்தியின் அதியானந்தமான வடிவத்தை ஒரு முறை தரிசித்தால் எத்தகைய நாஸ்திகனும் ஆஸ்திகனுகிவிடமாட்டானு! அர்ச்சாவதாரத்தின் மகிமையே இதுதானேப்பா!

இன்னும் கேட்கப்போனல் ஆழ்வாராதிகளும், நாயன்மார்களும் இதர பக்த சிகாமணிகளும் அர்ச்சாவதாரத்தில்தான் அத்யந்தப்ரீதியுடன் ஈடுபட்டு பக்திப் பரவசமடைந்து அந்த ஆனந்த மேகத்தினின்று பாட்டுக்களாயும் வசனங்களாயும் மழை போல் பொழிந்து பாமர ஜனங்களின் இதயப் பயிரை வளர்க்கும் அம்ருதமாகவிருக்கிறது. இதை நாம் அறியவில்லையா! அந்த புனிதமூர்த்திகள் தூய த்யாகச்சுடராய் ப்ரகாசித்து அனந்யபாவத்துடன் ஆண்டவன் திருவடியையே தஞ்சமென்று நம்பி அவனுடைய அர்ச்சாவதாரஸ்வரூபத்தில் ஐக்யமானதால் அந்த பகவானும் பரிபூர்ணத்ருப்தியும் வாத்ஸல்யமும் காட்டி அந்த பக்தகோடிகளிடம் நேருக்கு நேராக அர்ச்சையிலிருந்தே பேசிய அற்புதத்தையும் அபாரமான காரியங்களைச் செய்து காட்டியிருப்பதையும் நாம் படித்து இன்புறவில்லையா? இன்னென்றுகூட பாருங்கள்! பகவான் விபவரூபத்திலிருந்த காலத்தில் நேரில்கண்டு களித்து இன்புற்றவர்களுக்கு அவர் மானிடரூபத்தில் தோன்றி காக்ஷியளித்தார். பல காரியங்களை நிறைவேற்றும் முறையில் நின்ற விடத்தில் நிற்காது பறந்தார். பலருக்கு ஜவாப்பு சொல்ல வேண்டிய ஜோலி அதிகமாக விருந்தது. பல பேர் அவரை முறை ப்ரகாரம் சுற்றிக்கொண்டார்கள். சிலருக்குக்கிட்டினன், சிலருக்கு எட்டிப்போயிற்று. இந்த அர்ச்சாவதாரத்தில் அப்படியில்லை பாருங்கள். அவனை ஒரு கோயிலில் காணமுடியவில்லை என்றால் மற்றொரு கோயிலில் கட்டாயம் கண்டு களிக்கலாம். அசையாது ஒரேநிலையிலிருந்து அளப்பரிய ஆனந்தத்தைச் சதாகொடுத்துக் கொண்டே இருக்கலாம்.

கையிலகப்பட்ட குழந்தையைப் போல் கொஞ்சலாம். அற்புதமான அலங்காரங்களைச் செய்து கண்ணாரக் கண்டு மனதாரப் பூரிக்கலாம். அருமையான உத்ஸவாதிகளைச் செய்து இன்புறலாம். மனமுருகிப் பாடி ஆடி மெய்சிலிர்த்துக் கண்ணீர் தாரையைப் பெருகிக் பக்திப் பரவசத்தால் ஞானப் பயித்தியமாகவே ஆகலாம். அவன் நம்

கண் முன்னிலையை விட்டுப் போகமாட்டான். பக்திக்குக் கட்டுப் பட்டு குழந்தைபோலிருந்து பேரின்பத்தைக் கொடுப்பான். அத் தகைய அர்ச்சாவதாரத்திலுள்ள எம்பெருமானை பலமுறை கோயி லில் சேவித்த பிறகுதானே மனத்தில் நிலைநிறுத்திக் கொள்ளலாம். நீங்கள் ஒரே யடியாகப் பேசினல் முடியுமா! 'உலகம் பல விதம்' என்பது போல் மனிதசுபாவத்தில் எத்தனையோ மாறுதல்கள் இருக் கத்தான் செய்யும். கெட்டதைத் தள்ளிவிட்டு நல்லதைக் கொள்வது தானேப்பா!

நரஸி:— அடேயப்பா! முடிந்ததா ப்ரசங்கம்? ஏதேது உங்கள் போக்கு தடபுடலாக விருக்கிறதே, விபவாவதாரமாம்... அர்ச்சாவ தாரமாம்....சரி தான்; நீயொரு உபன்யாஸ பாகவதியாகி விடலாம் போலிருக்கிறதே, இப்படியே உங்களை விட்டால் பயித்தியம் முற்றி கோயிலே கதி என்றுதான் ஆகி விடுவீர்கள். இனி வீடேது. வாச லேது? விஷயம் மிதமிஞ்சி விட்டதே.... இனி இந்த வீண் பயித்தி யத்திற்கு இடங் கொடுக்கமாட்டேன். இன்று முதல் வெள் ளிக்கிழமைதான் கோயிலுக்குப் போக வேண்டும். தினம் போகக் கூடாது. இனி மேல் என் உத்திரவில்லாது காரை எடுத் துக்கொண்டு போகக்கூடாது. பத்திரம்; கொஞ்சத்திற்கு இடத் தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குவதுபோலாகிறது. "என்ன சார்! உங்க சம்சாரமும் குமாரத்திகளும் சதா கோயிலே க்தியாக இருக்கிறார்களே! வீட்டிலிருப்பதே இல்லையா!" என்று என்னைப் பரிகாஸம் செய்கிறார்கள். அது எனக்கு ப்ராணன் போகிறது போ லிருக்கிறது. அதோடு இவள் தினம் கோயிலில் மெழுகி கோலம் போடுகிறாளாம், சாணி பொருக்கிக்கொண்டு வருகிறாளாம். இதெல் லாம் என்ன அல்ப வேலை? என்னுடைய மதிப்பென்ன! கவுரவ மென்ன? இவள் செய்கிற வேலை என்ன? அதைக் கண்டிப்பதற் காகத்தான் இப்போது இங்கேவந்தேன். என்னையே இழுக்கப் பார்க் கிறீர்களா?...இந்திரா! மாமனுர் எழுதியிருக்கிற கடிதத்தைப் பாரு. நாம் பெரிய நாகரீகமான பேர்வழிகள் என்று எண்ணி சம்பந்தம் செய்தாராம், இப்போது தனது சம்மந்தி வீடு கூட்டும் வேலைக்காரி போல் கோயில் மெழுகுவதும் பெருக்குவதும் கோலம் போடுவதும் கூட நீயும் சேர்ந்து செய்வதும் அவர்களுக்கு வெட்கமாயிருக்கிற தாம். இம்மாதிரி அநாகரீக முறையில் பெண்ணைப் பழக்கினல் தாய் வீட்டில்தான் கிடக்கவேண்டுமாம். இல்லாவிடில் இப்போதே அவர்கள் வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய் விடுகிறார்களாம் சின்னப்பெண்ணை நாகரீகமாகப் படிக்க வைத்திருப்பது போல் இவளைப் படிக்க வைக்காததே குறையாம். ஏதேதோ எழுதியிருக் கிறார். எனக்கு இதெல்லாம் மிகவும் அவமானமாயிருக்கிறது. இம் மாதிரி இன்னொரு கடிதம் வரும்படி நடக்கவேண்டாம். கொண்டு கொடுத்து சம்பந்தம் செய்த இடத்தில் ஏச்சும் பேச்சுமானல் அதை விட அவமானம் வேறு என்ன வேண்டும்? அம்ருதா! நீயும் குழந்தை

யல்ல, இனிமேல் நான் இன்னொரு தரம் கண்டிக்கும்படி நடக்காதென்று நினைக்கிறேன், ஜாக்ரதை.—

என்று கூறியவாறு தன் பெயருக்கேற்றபடி நரஸிம்மாவதாரத்துடன் போய்விட்டார். இந்திராவுக்குத் தன் மாமனர் கடிதம் எழுதி இருப்பதே தெரியாது. கடுமையாக எழுதியிருப்பதைக் கேட்டு உண்மையில் பயந்து நடுநடுங்கிவிட்டாள். இந்த உயர்ந்த கைங்கர்யத்தின் மகிமை தெரியாது அதை அநாகரீகமாக எண்ணித் தன்னைத் தாய் வீட்டிலேயே தள்ளிவிட்டால் என்ன செய்வது என்கிற வேதனை உண்டாகியது. வெய்யிலில் வாடும் ரோஜா புஷ்பத்தைப் போல் அவளுடைய முகம் வாடி வதங்கிவிட்டது. அம்ருதவல்லியம்மாளின் மனத்தில் கவலை சிறிது பாசி போல் படிந்தது.

## 2

பெத்த தாய்மார்களுக்கு, தம் பெண்களைப் பெற்று வளர்த்து ஆயிரம் பாடுபட்டு உருப்படியாக்குவதுகூடச் சிரமமாகவோ, கவலையாகவோ தோன்ருது. அவர்களை நல்லவனுகப் பார்த்து விவாகத்தைச் செய்வித்துகொடுத்து புக்ககத்திற்கு அனுப்பி அவர்கள் நல்ல பெயர் வாங்கி'என் மருமகளைப்போல் இல்லை'என்கிற கீர்த்தியை புக்ககத்தினரிடமிருந்து பெறும்வரையில் தாய்மார்களின் உள்ளம் கவலைக்கடலாகக் கொந்தளிக்கும். பெண் புக்ககத்தில் நல்ல பெயர் வாங்கியதைக் கேட்ட பிறகுதான் தன் பெண்ணைப் பெற்ற பெருமையை அனுபவித்து இதயம் பூரிக்கும்.

சில தாய்மார்கள் பெண்ணைக் கொடுக்கும்போதே மருமகப் பிள்ளையைத் தவிர வேறு யாருமே இருக்கக்கூடாது, எல்லோரும் செத்துப் போயிருக்க வேண்டும் அல்லது கல்யாணம் நிச்சயமாகிய அன்றே தனியாகப் போய்விடவேண்டும், தன் பெண்ணே சர்வாதிகாரியாய் கணவனுடன் இஷ்டம்போல் இருக்கவேண்டும்' என்று ப்ரார்த்தித்து அப்படியே தேடியும் கொடுக்கிருர்கள்.

சிலர் இருப்பவர்களை விரட்டியும் அடித்தும் வயிறெரியச் செய்கிருர்கள். பெற்றுவளர்த்துப் பேரானந்தமடையவேண்டியதாயாரைப் பிரித்து வயிறெரியச் செய்யும் சங்கடத்தைத் தான் அனுபவிக்கும் போதல்லவா தெரியும். தன் மகனும் மருமகளும் ஆனந்தமாக இல்வாழ்க்கை நடத்துவதைப் பார்த்துப் பரம சந்தோஷப்பட விருக்கும் உள்ளம் பிரிவினல் கொதித்துக் கண்ணீர் விட்டுக் கலங்கினல் யாருக்கு நாசம், க்ஷேமக் குறைவு என்பதைச் சிலர் கவனிப்பதே இல்லை.

அம்ருதவல்லியம்மாளின் நடத்தையும் குணமும், மனமும் புராதன காலத்தைஅனுஷ்டிக்கும் முறையிலேயே த்ருப்தி கொண்டுள்ளவள். பெரியார் என்கிற மரியாதையும், அடக்க ஒடுக்கமும் கொண்

டுள்ள சீலவதி. ஆகையால் தன் குமாரத்தியும் கணவனுக்கு உகப்பாயும், மாமியார் மாமனருக்கு ப்ரீதியாயும், சுற்றத்தாருக்கு அன்பாயும், பணியாட்களுக்கு மதிப்பாயும் இருக்கவேண்டும். அம்மாதிரி தனது பெண் பெயரெடுக்கவேண்டுமே'' என்று கவலையே கொண்டவள்.

நல்ல இடமாயும் உயர்ந்த குடும்பத்தினராயும் மிக்க செல்வவந்தவராயும் தேடி இந்திராவை மணம் செய்வித்தாள். தன் கணவன் சம்மந்தியின் கடிதத்தைப் பற்றிச் சொல்லியதும் உண்மையில் அம்ருதவல்லியம்மாளுக்குக் குலைநடுக்கமும் பெண்ணின் வாழ்வுக்கே ஏதேனும் தாழ்வு வந்து விடுமோ! என்கிற பயமும் உண்டாகிவிட்டது. தன்னால் தன் பெண்ணுக்குஎங்கே ஒருகுறைவுஉண்டாகுமோ என்று நினைக்கும் போது அவளுடைய தேகமே கிடுகிடென்று ஆடியது. சில விநாடிகள் அப்படியே ப்ரமித்துநின்றாள். இவளுடைய குழப்பத்தைப்பார்த்ததும் சந்திரா மனம் வருந்தினவளாய் "அம்மா! ஏன் இப்படிக் கலக்கமுற்று நின்றுவிட்டாய்? சம்மந்தி வீட்டார் அக்காவை சீர்மார் படுத்துவார்களோ என்று உனக்குப் பயமா! அப்படியொன்றும் கனவில்கூட நடக்காது. உனது தூயபக்தியை பகவான் சோதிக்கமாட்டார். கவலைப்படாதே. அக்காவுக்காகவும் அப்பாவுக்காகவும் நீ இனிமேல் கோயில் மெழுகிக் கோலம் போடுவதை நிறுத்தி விடு'' என்றாள்.

அம்ருதவல்லி:— சந்திரா! நீ இளங்குழந்தை. இந்த உலக இன்பமும் இந்த சரீர சுகமும் நீர்க்குமிழி போன்ற வாழ்க்கையும் சாச்வதமென்று நீ நினைத்துப் பேசுகிறாய். பகவத் ஸன்னிதானத்தில் மெழுகிக் கோலமிடும் பாக்யம் எனக்குக் கிடைத்திருக்கிறதே என்று பரம சந்தோஷமும் அதுவே மகத்தான மோக்ஷத்திற்கு வழிகாட்டியான கைங்கரியம் என்றும் நான் நம்பியிருக்கிறேன். அநித்யமான மனித பாசத்தில் உழல்வதையும் விடமுடியவில்லை. இந்த உழலலின் நடுவில் சிறிது சேவை செய்வதை எப்படி விடுவது? எனக்கு அதை நினைக்கும்போதே விசனமாக விருக்கிறதே. எல்லாம் தெரிந்த அவர்களுக்கு இந்த உத்க்ருஷ்டமான காரியமா கேவலமானதாகத் தோன்றவேண்டும். இதுவும் என் பாவந்தான்.

சந்:—அம்மா! எல்லோருக்குமே உன்னைப்போன்ற விவேகமும் ஆழ்ந்த பக்தியும் இருக்குமா! அவர்கள் மிகவும் நல்லவர்கள் என்பது உண்மைதான். ஆனால் நாகரீகத்தின் சிகரத்தை எட்டிப் பிடிக்கும் நோக்கத்திலிருக்கிறார்கள். ஆதலால் அவர்களுக்கு நித்யம், அநித்யம் என்கிற எண்ணமே இல்லை. அதைப்பற்றி நமக்கென்னம்மா! அக்காவை அன்பாக வைத்துக்கொண்டு நடத்தவேண்டியது ஒன்றுதான் நமக்குத் தேவை. அவளுக்காக நீங்கள்கூட இனி இந்த கைங்கரியங்களை விட்டுவிடுங்கள். பகவான் எங்கும் இருக்கிறார். அவர் இல்லாத இடமே இல்லை. அவருடைய திவ்யஸ்வரூபம் எங்கும் வியாபித்திருப்பதால் உன் இதயத்திலேயே அவர் கோயில்கொண்

டிருக்கிறார். நீ கவலைப்படாதேம்மா! அக்காவின் முகத்தைப் பாரு. கவலை குடிகொண்டிருக்கிறது. உனக்குத் தெரியாத வேதாந்த மாம்மா பிறருக்குத் தெரியப்போகிறது?

அமிரு:—சந்திரா! அப்பா சொல்வதுபோல் நீ அபாரமான சாமர்த்தியத்துடன் பேசுவதைப் பார்க்கப் பார்க்க என் வயிற்றில் செய்யும் சங்கடம் கூறத்திறமே இல்லை. உன்னுடைய அற்புதமான ஸௌந்தரிய வளர்ச்சியையும் புத்தியின் விசாலத்தையும் சிறந்த ஒழுக்கத்தையும், கல்வித் திறமையையும் கண்டு களிக்க உன்னைப் பெற்ற மகாபாவிகள் கொடுத்துவைக்கவில்லையே! இத்தகைய ஆணங்கைப் பெற்றும் பிராப்தம் அற்றுவிட்டதே என்று வயிறெரிகிறது. அவர்களுடைய ஆயிஸையும் போட்டுக்கொண்டு நீ சர்வ மங்களத்துடனும் வாழவேண்டும். உன் போன்ற சாமர்த்தியமும் தெளிவும் இந்திராவுக்குக்கூட வராது என்று தாராளமாகச்சொல்லுவேன். உன் பெற்றோர்கள் இருந்தால் எத்தனை பூரிப்பார்கள்? உண்மையான ஆனந்தத்தை அந்த இதயமன்றோ உணரும்" என்று கூறும்போது கண்ணீர் வழிந்தோடியது.

சந்தி:—அம்மா! பழய கதைகளையெல்லாம் ஏனம்மா கிளறுகிறாய்? நீயே என்னைப் பெற்ற தாயார். உன்னைத்தவிர என் தாயாரே நேரில் வந்தால்கூட என் மனது அவளிடம் லயிக்காது போலிருக்கிறது. உன்னுடைய அபாரமான அன்புக்கு மேலாகவா என் அன்னை என்னிடம் வாத்ஸல்யத்தைக் காட்டப்போகிறாள்! இல்லை. இல்லை! என் தாயார் வேறொருத்தியிருப்பதாக நீ சொல்லிக் கண்ணீர் விடுவதால் எனக்குத் தாயார் ஒருத்தியிருந்தாள் என்று தெரிகிறதேயன்றி நீ சொல்லாவிட்டால் அதுகூடத் தெரியாது. அம்மா! நீ எசோதை பிராட்டியைப் போன்றவள். என் தாயார் தேவகியைப் போன்றவள். அவள் பெற்றாள். நீ வளர்த்தாய்; வளர்க்கிறாய். என்னுடைய அழகும் சாமர்த்தியமும் என்னிடம் உனக்குள்ள அளப்பரிய வாத்ஸல்யத்தினால் அதிகமாகத் தெரிகிறதேயன்றி நான் மிகவும் சர்வ சாதாரணமானவள்தான். என்னைவிடப் பதினாயிரம் பங்கு அதிகமான புத்திசாலித்தனமும் அழகும் அக்காவிடந்தான் இருக்கிறது.

இந்திரா:—பார்த்தாயாம்மா! நீயே பாரு. எப்போதும் சந்திரா இப்படித்தான் என்னைப் பரிகாஸம் செய்து மட்டந்தட்டுகிறாள். நான்தான் அவளைப்போல் எப். ஏ. படிக்கிறேனா! அல்லது பெரிய பணக்காரியாக இருக்கிறேனா! அசாத்ய அழகாயிருக்கிறேனா! என்னை என் இப்படி கேலி செய்யவேண்டும்?

அமிரு:—இந்திரா! இந்தமாதிரியான கோபந்தான் உனக்கு வரக்கூடாதென்று நான் சதா சொல்லுகிறேன். எத்தனை உயர்ந்த குணங்கள் இருப்பினும் அல்பமான ஆத்திரத்திற்கு மனத்தில் இடங்கொடுக்கக்கூடாது. ஆத்திரமே மனிதனுக்கு எமனாகமுடியும்,

சத்ருவாக அமையும், பகையைத்தானே வெகு அற்புதமாக ச்ருஷ்டித்துவிடும். அது செய்யும் கேடு ஒன்றிரண்டல்ல.

இந்திரா! வார்த்தைக்கு சொல்கிறேன். நாளைக்கு நீ உன் மாமியார் வீட்டிற்குப்போனால் ஏதாவதொரு சிறு விஷயத்திற்கு மாமியாரோ, நாத்தனாரோ, கணவனோ சுருக்கென்றுதான் பேசுவார்கள். சிறிய குற்றத்தையும் பாராட்டி பெரிதாக உன்னைக் கண்டிக்கவும் கூடும். அப்போது இதுமாதிரி எதிர்த்துப் பேசியோ ஆத்திரப்பட்டு இறைந்துவிடவோமுடியுமா! அம்மாதிரிச் செய்தால் அதுதான் உன்னை அடியோடு அழித்துவிடும். தெரியுமா?

உன்னுடன் பிறந்த சகோதரியைப்போன்ற சந்திராவிடம் நீ அன்பாயும், பரிவாயும் இருக்கவேண்டாமா! இன்னும் கேட்கப்போனால் அவள் திக்கற்ற குழந்தை. பரதேசி. இந்த பூமியில் அவள் ஜனனமாகியபோதே தாயாரை இழந்த பேதை. நம்மிடமே அடைக்கலமாக வளரும் அபலை. அத்தகையவளிடம் நீ அபாரமான வாத்ஸல்யமும் அனுதாபமும் கொண்டு நேசிக்கவேண்டும். அப்போதுதான் உனக்கு க்ஷேமம் உண்டாகும். பரதேசிப் பெண்ணை மனம் நோகப் பேசினால் கடவுள் உன்னையே நோகச் செய்துவிடுவார் தெரியுமா! இனிமேல் அனுவசியமாய் கோபித்துக்கொள்ளாதே. சந்திரா உன்னிடம் உயிராயிருக்கிறாள். இன்னும் சில மாதங்கள் தானே நீ அவளுடன் இருக்கப்போகிறாய். பிறகு நீ புக்ககத்திற்குப் போய்விட்டால் அவள் உன்னோடு இருக்கமுடியுமா! இருக்கும் வரையில் சந்தோஷமாயும் ஒற்றுமையாயும் இருங்கள். அதுதான் உலகத்திற்கும் அழகு. உனக்கும் க்ஷேமம்.

இந்திரா:—ஆமாம்மா! எப்போதும் நீ அவளுக்காகத்தான் பரிந்து பரிந்து பேசுகிறாய். நானென்ன சின்ன பாப்பாவா! என்னை மட்டும் அவள் கேலி செய்வதுபோல் பேசலாமா? இது என் கணவன் காதில் கேட்டால் என்னை அலக்ஷியமாக நினைக்கமாட்டாரா! அதற்குமட்டும் நீ இடங்கொடுக்கலாமா!

சந்தி:—அக்கா! நீ என்னதான் சொல்லு. சத்யமாக உன்னை நான் பரிகாஸமே செய்யவில்லை, என் மனத்தில் நீ என்னைவிட உயர்ந்த புத்திசாலி, அழகு என்று உண்மையாகத் தோன்றுகிறது. அதைத்தான் சொன்னேன். இனிமேல் நான் சொல்லவில்லை. அத்திம்பேருக்குக் கோபம் வரும்படியாக நான் கனவிலும் நடக்கமாட்டேன். கோவித்துக்கொள்ளாதே. என்னை மன்னித்துவிடு. இதோ உன்னை நமஸ்கரிக்கிறேன். கோவத்தை விட்டு வா... நாம் பாட்டு நோட்ரு செய்வோம். நாளைக்குசங்கீதப்போட்டியாயிற்றேஎழுந்திரு.

இந்தி:—சந்திரா! அம்மா சொல்வதுபோல் எனக்கு ஆத்திரந்தான் முன்னால் வருகிறது. என்னமோ சொல்லிவிட்டேன். நீயும் கோவித்துக்கொள்ளாதே... நான் சங்கீதப்போட்டியில் சேரப்போவதில்லை. அதுவும் ஒரு வேளை என் புக்ககத்தினருக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ! ஆதலால் என் பெயரை அடித்துவிடும்படி நான்

எழுதச் சொல்லப்போகிறேன். நீ மட்டும் போய் பாரு...என்று கூறிக்கொண்டே போய்விட்டாள்.

அமி:—சந்திரா! நான்கூட அப்படித்தான் நினைத்தேன். இந்திராவே புத்திசாலித்தனமாகத் தெரிந்து சொல்லிவிட்டாள். நீ போய் பாடத்தை நெட்டுருசெய். நான் ஸ்வாமிக்கு புஷ்பம் பறித்து மாலை கட்டிவைக்கிறேன். சாயங்காலம் கோயிலுக்குப் போகலாம்''

அதே சமயம் நரஸிம்மன் அங்கு வந்து ''அமிருதவல்லி! கோயிலுக்குப் போவதற்குமுன்பு இன்னொரு இடத்திற்குப் போக வேண்டும். நேற்று நான் சொன்னேன் பாரு. அந்த பங்களாவைப் பார்த்துவிட்டு வரலாம். சந்திராவின் பணம் 15 ஆயிரம் ரூபாய் ஒருவர் கொடுக்கவேண்டியதைக் கொடுத்துவிட்டார். அதை வட்டிக்குக் கொடுப்பதைவிட அழகான பங்களா ஒன்று வாங்கி அதற்கு 'சந்திரபவனம்' என்று பெயரை வைத்து வாடகைக்குவிட்டால் குறைந்தது மாதம் 150 ரூபாய் குடிக்கூலி வரும். சந்திராவுக்குக் கல்யாணத்தை அதே பங்களாவில் செய்து கொடுத்தால் வருகிறமணமகனும் பூரித்துப்போவான். இல்லையாசந்திரா''என்றார்.

சந்திராவுக்கு வயது 16 ஆகிறதேயன்றி அவளுடைய குழந்தை சுபாவமும் குருகுருவென்ற குறும்புப் பார்வையும் அவளைவிட்டுப் போகவே இல்லை. இன்னும் நான்கு வருடங்களுக்கு முன்பெல்லாம் தகப்பனரின் கழுத்தைக் கட்டிக்கொண்டு மிகவும் சிறு குழந்தை போல் கொஞ்சுவாள். இப்போது வயது வந்துவிட்டதால் அந்த செய்கையைவிட்டுப் பேசத்தொடங்கினள்.

''அப்பா! பங்களாவை வாங்கி வாடகைக்கு விடுவானேன். நாம் வாடகை பங்களாவில் இருப்பதை நிறுத்திவிட்டு சொந்த பங்களாவிலேயே இருக்கலாம்பா! உடனே பேசி முடித்துவிடுங்கள்'' என்று குதூகலத்துடன் கூறியபடியே உள்ளே ஓடி ஒரு நொடியில் வெகு அழகாக உடை உடுத்திக்கொண்டு இந்திரா சகிதம் வந்தாள்.

பிறகு நால்வரும் காரில் ஏறிக்கொண்டு புதிய வீடு பார்க்கச் சென்றார்கள். சந்திராவின் மனத்தில் ஆனந்தம் கொந்தளிக்கின்றது. அந்த சந்தோஷ மலர்ச்சி அவள் முகத்தில் பிரகாசிக்கின்றது. இந்திராவுக்கோ, அவள் தாய் எத்தனைதான் புத்தி சொல்லிச் சமாதானம் செய்து வைத்தாலும் ஆத்திரமும் சிறிது பொறாமையும் ஸ்வபாவிகமாக எப்படியோ வந்துவிடுகிறது.

''சந்திரா சொந்த பங்களாவின் அதிகாரியாகிவிடப்போகிறாள். நாம் அதில் குடியிருக்கப்போகிறோம். நமக்கு பங்களா ஏது? மண்ணேது? ஒரு பெரிய வீடாவது இருந்தால் போதும். அதுவும் இல்லையே! சந்திராவும் நாமும் ஒன்றாகமுடியுமா! அவள் பெற்றோரற்ற பரதேசி என்கிற ஒரே குறையைத்தவிர மற்றபடி என்ன குறைவு? லக்ஷ ரூபாய்சொத்திற்கு அதிகாரி. அந்த பெருமை ஒன்றே அவளுக்குப் போதாதா!'' என்றெல்லாம் தோன்றியது.

அம்ருதவல்லியம்மாளுக்கு உள்ளூறச் சந்தோஷம் பொங்கு கிறது. பரதேசிக் குழந்தைக்கு ஒரு குறைவும் இல்லாது சந்தோஷமா யிருந்தால்போதும். அவளுடைய பெற்றோர்களின் ஆத்மா ஆனந்த முற்று வாழ்த்தவேண்டும். நல்ல வரனைத் தேடி விவாகத்தைச் செய்து வைத்து அவள் வயிற்றில் நாலு குழந்தைகள் பிறந்துவிட் டால் போதும்'' என்றெல்லாம் அவள் யோசனை செய்கிறாள்.

நரஸிம்மனும் தன்னுடைய ஆப்த சினேகிதனுக்கு அந்திம காலத்தில் வாக்குக் கொடுத்தபடி சந்திராவைத் தன்னுயுள்வரையில் காப்பாற்றி அவள் பிதாவின் விருப்பப்படி அவளை பி. எ. பட்டதாரி யாக்கி உயர்ந்தவனைத் தேடிப்பிடித்து அவனிடம் சந்திராவையும் சொத்தையும் ஒப்புவித்துவிட்டால் தன் கடமை முடிந்துவிடும் என்று எண்ணுகிறார்.

ஒவ்வொருவர் ஒவ்வொருவிதமாக எண்ணியபடியே சென் றார்கள். ட்ரைவரும் தன் கடமைப்படி காரை யோட்ட, அது வேக மாகச் சென்றது.

## 3

பிரம்மாண்டமான தோட்டமும், தோட்டத்தைச்சுற்றி காம்ப வுண்டு சுவரும் அத்தோட்டத்தின் ஒரு புறத்தில் மிகவும் அழகான சிறிய தாமரைக் குளமும் அருமையான பலவித புஷ்பச் செடிகளும், விதவிதமான கனிகள் கொடுக்கும் மரங்களும் தோட் டத்து மத்தியில் 'மயனல் சிருஷ்டிக்கப்பட்டவையோ!' என்று பிர மிக்கும்படியான ஆனந்த பங்களாவும் அந்த பங்களாவின் அமைப் பைப் பார்க்கும்போதே மனத்தைக் கவரும் எழில் வாய்ந்த வசீக ரத்துடன் விளங்கியது. நால்வரும் அந்த பங்களாவுக்குள் நுழை யும்போது சொல்லிவைத்ததுபோல் பங்களாவின் பக்கத்து வீட்டில் நடக்கும் கல்யாணத்திற்கு மேளம் வாசிக்கப்பட்டதைக் கேட்டதும் அம்ருதவல்லியம்மாளின் இதயத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. சந்திராவின் சந்தோஷம் சொல்லமுடியாது கரைபுரண்டது.

பங்களாவின் வாசலில் வெகு அழகான கிருஷ்ணனுடைய சிலை நிறுத்தப்பட்டிருந்ததைப் பார்த்ததும் சந்திராவின் ஆனந்தமும் ஆசையும் உச்சத்தை எட்டியது. "அக்கா! இந்த கிருஷ்ண பிம்பத் தின் அழகைப் பார்த்தாயா! கோயிலில் வைத்திருக்கும் சிலையைப் போலவே இருக்கிறது. அதோ! மரத்தில் ஊஞ்சல் கட்டியிருக் கிறது. வாயேன் போய் நாம் சற்று ஆடுவோம். என்ன அழகான தோட்டம். என்ன அற்புதமான பங்களா! உனக்குப் பிடித்திருக் கிறதா அக்கா!'' என்று வெகு வாத்ஸல்யத்துடன் கேட்டாள்.

இந்திராவுக்கு உள்ளூற மனத்தில் "சந்திராவுக்கு அழகான பங்களா வந்துவிட்டதே!" என்கிற ஒரு சிறு பொருமை விதை விழுந்துவிட்டதால் கபடமற்றுக் கேட்கும் சந்திராவுக்குப் பதில் சொல்லத் தியங்கினுள். பிறகு ஒப்புக்குப் பேசியாகவேண்டுமே என்கிற எண்ணத்தினல் "உம்...வெகு நன்ருக இருக்கிறது. நீ எத்தனை அழகாயிருக்கிருயோ, அதுபோல் உன் பங்களாவும் அமைந்திருக்கிறது" என்ருள்.

சந்திரா மிகவும் நிதான புத்தியுடையவளாதலால் கோபித்துக் கொள்ளாமல் "என்னக்கா இப்படி. சொல்கிருய்? என்னுடையது. உன்னுடையது என்று வித்யாஸமாக நான் கேட்டேனு! நான் வேறு நீ வேரு! எனக்குச் சொந்தமானது உனக்கும் சொந்த மில்லையா! உனக்கு உரிமையானது எனக்கு ஸ்வதந்திரமில்லையா! ஏதோ மாதிரி பேசுகிருயே!" என்ருள்.

இந்:—ஒருமாதிரியும் பேசவில்லை. உனக்கு ஏற்ற பங்களா இதுதான் என்று உண்மையைத்தான் கூறினேன். சந்திரபவன் என்று பெயர் வைத்தால் மிகவும் பொருத்தமாகவிருக்கும். வா உள்ளே; அம்மா போய்விட்டாள் என்று கூறியபடியே சந்திராவுடன் தானும் உள்ளே சென்ருள். அங்கிருந்த பாராக்காரக் கிழவன் இவர்களுக்கு பங்களா முழுவதையும் காட்ட, ஒரு இடம் பாக்கியில்லாது பார்த்தார்கள். எல்லோருக்கும் மிகவும் பிடித்து விட்டது."அதை விடுவதில்லை. வாங்கியே தீருவது" என்று முடிவும் செய்துகொண்டார்கள்.

அமி:—ஆமாம். பங்களா மிகவும் பிடித்துவிட்டதோடு பார்க்க வரும்போதே மங்களகரமாக மேளம் வாசித்ததால் அதுவே சரியான சகுனமாகிவிட்டது. இனி நாம் யோசனையே செய்யவேண்டாம். முடித்துவிடுங்கள். ஏம்மா, சந்திரா! உனக்குப் பிடித்திருக்கிறதா!" என்று அமிருதவல்லி கேட்டாள்.

தனக்குப் பரிபூர்ண சம்மதம் என்று சந்திரா தெரிவித்ததும் எல்லோரும் வீட்டிற்குச் சென்ருர்கள். பங்களாவை வாங்கிவிட்டால் அதில்தான் போய் இருக்கவேண்டும். அதில் இன்னும் பிரமாதமான சிங்காரங்கள் செய்யவேண்டும். பர்னீசர்கள் வாங்கிப் போடவேண்டும். தோட்டத்தை இன்னும் அழகாகச் செய்து மத்தியில் பவுண்டன் கட்டவேண்டும் என்றெல்லாம் சந்திரா அன்று முழுதும் யோசனை செய்துகொண்டிருந்தாள். தனது சினேகிதைகளை எல்லாம் அழைத்துப் போய் காட்டவேண்டும். முக்யமாய் தனது உயிரினும் உயிராய் விளங்கும் ஸ்ரீதரனுக்கு நாளையே அழைத்து வந்து காட்டவேண்டும். அவன் இதைப் பார்க்கும் போது பரம சந்தோஷப்படுவான். அவனுடைய சந்தோஷமே தனக்குப் பேரின்பமாகவிருக்கும் என்றெல்லாம் இன்ப எண்ணம் எண்ணி எண்ணி இரவு முற்றும் தூக்கங்கூடப் பிடிக்காமல் சந்தோஷ அலை மோதப் படுத்துக்கிடந்தாள்.

மறுதினம் வழக்கம்போல் காலேஜில் டிப்பன் சமயத்தில் ஸ்ரீதரனைக் கட்டாயம் சந்திக்கவேண்டும் என்று அந்த நேரத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அன்று ஸ்ரீதரன் வரவே இல்லை. காரணமும் தெரியவில்லை. பிறரைக் கேட்டுத் தெரிந்துகொள்வதற்கும் சங்கோஜமாயிருந்ததால் மனத்திற்குச் சப்பென்றுபோயிற்று.

சில பெண்களைப்போல் சந்திரா அதீதமாக நடந்துகொள்ளும் சுபாவமுடையவளல்ல. அம்ருதவல்லியம்மாளின் சகோதரியின் வீட்டிற்கு இந்திராவையும் சந்திராவையும் லீவுக்கு அழைத்துச் செல்வதுண்டு. அம்மாதிரி ஒரு சமயம் போயிருந்தபோது தற்செயலாக ஸ்ரீதரனைச் சந்திக்கவும், அந்த சந்திப்பு அடிக்கடி உண்டாகியதாலும் பிறகு இருவரும் ஒரே காலேஜில் படிப்பதனால் அதிக சிநேகம் உண்டாகி பரஸ்பரம் அன்பு பெருகி அதன் பயனாக உண்மை நேசர்களாய் பிரேமைக்குக்கட்டுப்பட்டவர்கள் ஆனார்கள்.

இந்த பரம ரகஸியம் இவ்விரு ஆத்மாக்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. ஒருதினமாவது இருவரும் பார்க்காதிருக்க மாட்டார்கள். அப்படிப் பார்த்தாலும் அவ்விடத்திலேயே பேசி விட்டுப் போவாளேயன்றி ஸ்ரீதரனுடன் தனியாகப் போவதோ அவன் வீட்டிற்குத்தான் போவதோ, தன் வீட்டிற்கு அவனை அழைத்துச் செல்வதோ ஒன்றுமே கிடையாது. இம்முறையிலே அவர்களுடைய பிரேமையும் வளர்பிறைபோல் அவர்களறியாதவாறே வளர்ந்துவிட்டது. அதனால் ஒருநாள் சந்திக்காவிட்டால்கூட இருவரும் மிகவும் சங்கடப்பட்டுத் தவிப்பார்கள். இன்று சந்திரா வெகு ஆவலுடன் வந்தும் அவன் வராததால் மிக்க ஏமாற்றமாகியதோடு அவன் ஏன் வரவில்லையோ! என்கிற கவலையும் உண்டாகி விட்டது. படிப்பின் மீதும் ஓடவில்லை. ஒருவாறு படித்துவிட்டு வீட்டிற்கு வந்தாள். மறுதினம் சனி; ஞாயிறு ஆகையால் சந்திராவே காலேஜுக்கு வரவில்லை.

இதற்குள் வீடு வாங்கும் விஷயமும் முடிவடைந்துவிட்டது. சந்திராவின் பெயருக்கே வாங்கி 'சந்திர பவனம்' என்ற புதிய பெயரை வைக்கவேண்டும் என்று நரஸிம்மன் தீர்மானித்து அதே மாதிரிப் பத்திரம் எழுத வாரம்பித்தார்.

ஆனால் மகா புத்திசாலியாகிய சந்திரா அதற்குச் சிறிதும் சம்மதப்படவே இல்லை. தன் தகப்பனாரை எதிர்த்துப் பேசி, "அப்பா! நீங்கள் என்ன சொன்னாலும் நான் சம்மதிக்கமாட்டேன். அந்த பங்களாவைக் கட்டாயம் அம்மா பேரில்தான் வாங்கவேண்டும். அம்மாதான் கையொப்பம் வைக்கவேண்டும். அம்மாவின் அழகான பெயருக்கேற்ப "அமிருதபவன்" என்றுதான் பெயர் வைக்க வேண்டும். அதற்குச் சம்மதிக்கவில்லை என்றால் நீங்கள் வீடே வாங்கவேண்டாம். இது ஒரே தீர்மானந்தான். என் மனப்படிச் செய்யுங்கள்" என்றாள்.

நர:—சந்திரா! உன்னுடைய பரிசுத்தமான இதய அன்பை நான் அறிவேன். உன் தாயும் அறிவாள். உன் பிதா கஷ்டப்பட்டு சம்பாதித்த செல்வம் உனக்கு உரித்தேயன்றி மற்றவர்களுக்கு உரிமையாகாது. அதிலும் எங்களுக்கோ பிள்ளை இல்லை. வேண்டுமென்று கலகக்காரர்களின் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு இந்திராவின் கணவனே அந்த பங்களாவை எனக்குக் கொடுத்தால் தான் என்று கேட்கலாம். எல்லாவற்றையும் யோசித்துத்தான் நான் சொல்கிறேன். நீ தடங்கல் செய்யாதேம்மா!

சந்தி:—அப்படிக் கேட்டால் தாராளமாக கொடுத்துவிடலாம்பா! அக்காவுக்கு இல்லாத சொத்தா? அவள் அடைந்த மீதி எனக்குப் போதும். ஆகையால் தடங்கல் சொல்லாது வாங்குங்கள்-என்றதால் அதற்குமேல் இருவரும் தர்க்கம் செய்ய மனதுவராது சம்மதித்தார்கள். சந்திராவின் மனதும் சந்தோஷத்தை யடைந்தது. பங்களா வாங்கிய உடனே க்ரகப் பிரவேசத்தை வெகு நன்ருக நடத்தவேண்டும். அப்போது இன்னும் பிரமாதமான அலங்காரத்துடன் பங்களாவை தன் அன்பனுக்குக் காட்டி அவரையும் தன் பிதாவுக்கு அறிமுகப்படுத்தவேண்டும். தனது எண்ணத்தை ஒரு சிறிது தனது பிதாவுக்குத் தெரியப்படுத்திவிடவேண்டும் என்று முடிவு கட்டிக்கொண்டாள். அந்த சந்தோஷமே அவளுக்கு உண்டாகிய வக்கத்தை நீக்கி உற்சாகத்தை யளித்தது.

## 4

அமிருதவல்லி என்கிற பெயருக்கேற்ருர்போல் அந்தம்மாளின் அமிருதம்போன்ற குணத்தழகைக் கண்டு உலகமே கொண்டாடி மகிழும். பதிசொல் கடவாப்பாவை, என்பதுபோல் தன் கணவன் அன்று கோவித்துக்கொண்டதற்குப்பிறகு கோயிலுக்கு தினம் அதிகாலையில் சென்று பரிசுத்தமாக பெருக்கி மெழுகி கோலமிட்டு விளக்கேத்தி வைத்து பிரதக்ஷண நமஸ்காரம் செய்துவிட்டு வருவதை நிறுத்திவிட்டாள்.

சரீரத்தினல் நிறுத்தமுடிந்ததேயன்றி மனத்தினல் தடைசெய்ய முடியவே இல்லை. தினம் அந்த புனித கைங்கர்யம் செய்வதைத் தனது பாக்யமென்று எண்ணி பரம த்ருப்தியடைந்து ஆனந்த பூரிப்பால் உள்ளம் குழைவாள். இப்போதோ, தனக்கு மிகவும் மேலான பதவி கிடைக்கவிருந்தது தவறிவிட்டதுபோன்றும் புனிதமான கைங்கரிய தனத்தை இழந்துவிட்டதுபோன்றும் வக்கம் பிடித்துக்கொண்டது.

கணவனுக்குத் தெரியாது செய்யலாமா என்றால் அதுவும் மனமொப்பவில்லை. கணவனே தெய்வம்; கணவன் சொல்லை மீறினால் கொடிய ரௌரவாதி நரகந்தான் கிடைக்குமென்றதைப் படித்திருக்கும் உத்தமியாகையால் அதற்கு மனம் இடங் கொடுக்கவில்லை. தற்போது பங்களா வாங்கப்போகும் இடத்திற்கு சுற்றுமுற்றும் ஒரு மைல் தூரத்தில் கோயிலே கிடையாது. வாரம் ஒருமுறை போவதற்கும் முடியாது-வசதியில்லாது-போய்விடுமோ என்றும் தோன்றியது.

இதே விசாரத்தில் குழம்பியபடியே தனக்கு இவ்வளவுதான் பிராப்தம் என்று முடிவுசெய்துகொண்டாள். அச்சமயம் சம்மந்தியம்மாளிடமிருந்து கடிதமொன்று வந்ததை சந்திரா கொண்டுவந்து கொடுத்தாள். அமிருதவல்லி அதைப் படிக்கவாரம்பித்தாள்.

"சம்மந்தியம்மாளுக்கு, உபயக்ஷேமங்கள்.

என் கடிதத்தைப்படித்து கோபமடையாதீர்கள். உங்கள் பர்த்தாவுக்கு என் கணவர் ஏற்கெனவே விவரமாக எழுதியிருக்கிறார். அடுத்த மாதமே ஸௌ-இந்திராவைக் கொண்டு விட்டுவிடவும். அவள் அங்கிருந்தால் கோயில் பெருக்கும் வேலைக்காரியாகவே ஆகிவிடுவாள் என்று என் மகன் கவலைப் படுகிறான். அதோடு சின்ன பெண்ணை B. A. ஆனர்ஸ் படிக்க வைக்கும் உத்தேசத்துடனிருக்கும் நீங்கள் பெரியவளைமட்டும் எங்களுக்காக S. S. L. C. வரையில் படிக்கவைத்து நிறுத்தி விட்டீர்கள் என்று என் மகன் குறைப்படுகிறான். அவனுடைய படிப்பின் திறமைக்கும் உயர்ந்த குணத்திற்கும் சர்க்கார் மெச்சி இப்போது இன்னும் பெரிய உத்யோகமாகியிருக்கிறது என்பதைச் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த மாதம் ஆறுந்தேதி நாள் நன்றாயிருப்பதால் பெண்ணைக் கொண்டுவிடும்படி இப்போதே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்,
கோமதி."

இதைப் படித்த அமிருதவல்லியம்மாளுக்கு விசனமே உண்டாகியது. பணக்காரர்களாயிருந்தால் என்ன, கௌரவமான உத்யோகஸ்தனை இருந்தால் என்ன! பகவத் கைங்கர்யத்தின் உயர்வு கூட மனத்தில் படாது போய்விடுமா? இன்னும் ஆதிகாலத்து ஆந்த ரங்க பக்தர்களைப்போல் பகவத் ஸ்வரூபத்தின் மகிமையறிந்து ஐக்யமாகும் சக்தி பெற்றுவிட்டால் இந்த மூடர்கள் என்ன சொல்வார்களோ! அடாடா! பகவானுக்குத் திருப்பணி செய்யும் உவமையில்லாத பாக்யத்தைத் தந்துள்ள இச் சுவை தவிர யான் போய் இந்திர லோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே! என்றெல்லாம் அர்ச்சாவதாரத்திலீடுபட்ட பக்தர்கள் மனமுருகிக் கண்ணீர் மல்கி ஆனந்தப் பரவசத்துடன் அரும்புதையல் போன்ற பாசுரங்களை மழைபோல் பொழிந்திருக்கும் அழகைக்

கண்டறியும் சக்திகூட இல்லாத மனிதப்பிறவிகளை என்னென்பது? உம்,...நான் செய்த பாக்யம். நான் அநியாயமாய் எந்த காரியமும் செய்யவில்லை. அக்கிரம வழிக்குப் போகவில்லை. என் செய்கையினால் என் குழந்தைக்கு ஊனம் வந்ததென்கிற அபவாதத்திற்கு அணு வளவும் நான் பாத்திரமாகவேண்டாம். அந்த விபத்திலிருந்து என்னை யும் என் குழந்தைகளையும் காப்பாற்று'' என்று பகவானை வேண்டிக் கொண்டு பெண்ணைக் கொண்டுவிடுவதற்குமுன்பே பங்களாவை வாங்கி கிரகப்பிரவேசத்தை முடித்துவிடத் தீர்மானம் செய்து கொண்டாள்.

பெண்ணை அவர்கள் இஷ்டப்படியே கொண்டுவிடுவதாக மிகவும் தாழ்மையுடன் கடிதம் எழுதிவிட்டாள். பங்களா வாங்கும் வேலை வெகு மும்முரமாக நடந்து, சந்திராவின் விருப்பப்படியே அமிருதவல்லியம்மாள்பேரிலேயே வாங்கி பத்திரம் ரிஜிஸ்டராகிய பிறகுதான் சந்திராவின் மனது திருப்தியாயிற்று.

பங்களா வாங்கியபிறகு அநேக ரிப்பேர்கள் செய்யவாரம்பித் தார்கள். தோட்டத்தில் இன்னொருபுறம் ஒரு கிணறு வேண்டியிருந்த தால் பள்ளம் தோண்டினார்கள். சுமார் 10 அடி ஆழம் தோண்டி யதும் ஏதோ கருங்கல்லு தட்டுப்படுவதை யறிந்த கட்டிட வேலைக் காரர்கள் இதற்குள் புதையல் ஏதாவது கட்டாயம் இருக்கும்போல் தோன்றுகிறது. மெல்ல இதை வீட்டுக்காரர்களுக்குத் தெரியாமல் அமுக்கிவிடவேண்டும்'' என்கிற பேராசை உண்டாகியதால் வெகு அக்கரையுடன் ரகஸியமாகவும் சுறுசுறுப்பாகவும் வெட்டினார்கள்.

அந்த இடத்தில் வெட்டவெட்ட கருங்கல்லின் சப்தமே அதிக மாக இருந்ததால் முற்றிலும் தோண்டிப்பார்க்கையில் இவர்களே பிர மிக்கும்படியான அபூர்வமான கருங்கல் மண்டபம் ஒன்று தென்பட் டது. மண்டபம் என்று அறிந்ததும், "இதில் கட்டாயம் ஸ்வாமி ஏதா வதிருக்கவேண்டும். இது புதையலல்ல. உடனே எஜமானுக்கே தெரிவித்துவிடவேண்டும். சாமி ஏதாவது செய்துவிட்டால் மகா கஷ்டமாகிவிடும்'' என்கிற ஒரு பயம் உண்டாகிவிட்டது.

உடனே நரஸிம்மனுக்குத் தெரிவித்தார்கள். நரஸிம்மனும் அமி ருதவல்லியம்மாள் முதலிய எல்லோரும் வந்து பார்த்து பிரமித்துப் போய் தாமே பக்கத்திலிருந்து முழுவதும் வெட்டச் செய்துப் பார்க்கும்போது "ஏதோ சிறிய கோயிலின் ஒரு பாகம் எக்காலத் திலோ பூகம்பத்தில் மறைந்தோ, அல்லது பழுதாகப் போய் பார்ப் பார் அற்று மண் மூடியதாலோ இம்மாதிரி பாழாகியிருக்கவேண் டும்'' என்று தெரிந்தது.

சிறிய மண்டபமும் அதில் ஒரு சிறிய சந்நிதியும் அதற்குள் ஒரு அதியற்புதமான முரளீ கிருஷ்ண லீலையும் பக்கத்தில் ருக்மிணி தேவியின் சிலையும் இருக்கக் கண்டு உள்ளம் பூரித்துப் புலகிதமடைந் தார்கள். "அமிருதவல்லியம்மாளின் பக்திக்கும் திருப்பணிக்கும் மெச்சி பகவான் இந்த நூதன விசித்திர ஆலயத்தை வாத்ஸல்ய

குணத்துடன் காட்டியிருக்கிறார்" என்று சந்திராவின் உள்ளம் மகிழ்ந்தது. பகவானை சேவிப்பதற்கு முன்பு தன் தாயைச் சேர்த்து கட்டிக்கொண்டு, "அம்மா! குழந்தைகளிடத்தில் தாயார் அளப்பரிய வாத்ஸல்யத்துடன் தன் சரீரத்தைச் செருப்பாய் உழைப்பாள் என்றும் அதேபோல் இவ்வுலகத்துக்கெல்லாம் தாயாயும் தந்தையாயும் இருந்து ரக்ஷிக்கும் ஜகன்னாதனும், ஜகன்னாயகியும் வாத்ஸல்யத்துடன் உனக்குக் காக்ஷி கொடுத்து ஆதரிக்கவே இம்மாதிரி ஒரு அற்புதம் உண்டாகியிருக்கிறது. உன்னதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். உன்னுடைய பாக்யமே பாக்யம். இந்த பகவானுக்கு நீ அனவரதமும் கைங்கர்யம் செய்யலாம். இனி கவலைப்படாதேம்மா! பகவானின் நித்ய கைங்கர்யத்தைக் குறித்து இனி அப்பாவும் கோபிக்கமாட்டார். சம்மந்திகளும் இளப்பமாகப் பேசமாட்டார்கள். பயப்படாதே. என் இதயம் இப்போதுதான் நிறைந்த இன்பத்தை அடைகிறது" என்று கூறினாள்.

அந்தமாதிரியான காக்ஷியொன்று இந்த ஜென்மத்தில் இது வரையில் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. இப்போது நேரில் பார்த்த உடனே அமிருதவல்லியம்மாளுக்கு ஆனந்தமேலிட்டால் தேகம் பரவசமாகி "கிருஷ்ணா! கிருஷ்ணா!! முரளீ கிருஷ்ணா! ராதா கிருஷ்ணா!" என்று வாய்விட்டுக் கத்தினாள். அந்த கிருஷ்ண விக்ரகத்திற்குப் பக்கத்தில் ஏராளமான பாம்புப் புத்துகளும், பூச்சிகளும் இருப்பதைக்கூடப் பொருட்படுத்தாமல் ஓட்டமாக ஓடி அந்த பிம்பத்தைக் கட்டிக்கொண்டு, அப்படியே மூர்ச்சியாகிவிட்டாள்.

இக் காக்ஷியை நேரில் கண்டபிறகே நரஸிம்மனுக்கு தன் மனைவியின் அந்தரங்கமான தெய்வ பக்தியின் சிறப்பும், தன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அவள் கோயிலுக்குக்கூட போகாது இருந்த மேன்மையும் பிரத்யக்ஷமாகத் தெரிந்தது. அது வரையில் மூடியிருந்த ஞானக் கண் திடீரென்று திறக்கப்பட்டதுபோல் ஒரு உணர்ச்சி தோன்றியது. அவ்வுணர்ச்சியின் வேகம் கிறுகிறென்று பாய்ந்து வெகு வருஷங்களுக்கு முன்பு காலமாகிவிட்ட தன் ஆப்த சினேகிதனின் உருவம் கண் முன் பிரத்யக்ஷமாகத் தோன்றி,

"நச்சு...நீ மகா பாக்யசாலியடா! உன்னைப்போன்ற பாக்யம் எவருக்கும் கிடைக்காது. தினம் நான் அதிகாலையில் உன் வீட்டிற்கு வருவதை உன் தாயாரும் தகப்பனாரும் நல்ல பஸ்டு க்ளாஸ் காப்பி, பலகாரத்திற்காக வருவதாக நினைத்து ஏளனமாகக்கூடப் பேசுகிறார்கள். நான் அதற்காக வரவில்லை. கடவுள் கிருபையில் பத்துபேருக்கு நான் கொடுத்துச்சாப்பிடும் சக்திபெற்றிருக்கிறேன்.

நச்சு! எதற்காக வருகிறேன் தெரியுமா! நீ அடைந்திருக்கும் பொக்கிஷம், கிடைத்தற்கரியதான மாணிக்கம், பக்த சிகாமணி கலியுக மீராபாய் என்று தோற்றும் உன்னுடைய தர்ம பத்தினியை அதிகாலையில் தரிசிக்கவே நான் வருகிறேன் தெரியுமா!

விடியற்காலையில் கோயிலுக்குச் சென்று சந்நிதிக்கு முத்து கோர்த்ததுபோல் கோலமிட்டு அஞ்ஞான இருளைப் போக்கும்படியான திருவிளக்கேற்றி பின் புஷ்பங்களைச்சமர்ப்பித்து பகவானை வணங்கிவரும் உத்தமியின் முகத்தில் விழித்தால் கோடி பாவம் போகும். அதற்காகவே நான் வருகிறேன். வேறு வித்யாசமாக நினைத்துவிடாதே. என்னை இந்த ஊரை விட்டு மாற்றிவிடுவார்கள் போலிருக்கிறது. ஊரை விட்டுப் போய்விட்டால் இந்த மகாலக்ஷ்மியின் தரிசனம் போய்விடுமே" என்று தோன்றுவதால் இன்று உன்னிடம் சொல்லிவிட்டேன்."

என்று சொல்வதுபோல் உருவெளித்தோற்றம் உண்டாயது. மயிர் சிலிர்த்து முகம் மாறியது. "ஆம்! ஆம்! அமிருதத்தின் மகிமையறியாதும், குமாரசாமியின் மனோதிடத்தை யறியாதும் ஆதியில் அவன் சொல்லிய வார்த்தைகளை நான் வேஷவார்த்தைகள் என்றும் வஞ்சக நெஞ்சத்தின் விஷபாணம் என்றும் எண்ணி, மகா உத்தமியான அமிருதவல்லியை அடித்தும் இம்ஸித்தும் தாய் வீடே கதியாகத் துடிக்கும்படியும், பிறர் வாழாவெட்டி என்று ஏசுவதைக் கேட்டுக் கதறவும் செய்ததோடு அந்த புண்ணிய புருஷனை விஷம் போல் எண்ணி வெறுத்துச் சண்டையிட்டு துராக்ருதமாக அவனுடைய உத்தியோகத்திற்கே உலைவைக்கவும் துணிந்த பாதகம் என் உத்யோகமே போகும் ஸ்திதிக்கு வந்தது முதல், சகலமும் படக் காக்ஷியைப்போல் கண்முன்பு கிறுகிறென்று ஒரு சுற்று சுற்றிக் கலக்கிவிட்டது.

சுமார் 5, 6 வருடங்களுக்குப் பிறகு அதே சினேகிதனின் தூய்மையறிந்து அவனுடைய முயற்சியினாலேயே அமிருதவல்லியை மறுபடியும் அழைத்துக்கொண்டதும், எந்த மனிதனை விரோதித்தோமோ அவனே உத்தமனென்று அறிந்து பழய விஷயங்களுக்கு வருந்தி மன்னிப்புக் கேட்டுக்கொளவதற்குள் தன்னுடைய விலையிலாத மாணிக்கம்போன்ற குழந்தையை அவனுக்கு துரோகம் நினைத்த என்னிடமே ஒப்படைத்துவிட்டு மறைந்துவிட்டானே. அவனுடைய சொத்தினாலேயே வாங்கிய பங்களாவில் அவனுடைய அன்பினாலேயே ஒரு ஆலயத்தின் சின்னம் காணும்போது எப்படித் தானிருக்கும்? என்னால் இந்த ஆச்சரியத்தையும் அத்தகைய சினேகிதனை யிழந்த விசனத்தையும் சகிக்கவே முடியவில்லையே! எத்தனை ஆழ்ந்த பக்தியிருந்தால் அமிருதவல்லி இப்படி மயக்கமாவாள்?"

என்றெல்லாம் அவரை யறியாது தோன்றியதால் அப்படியே கண்ணீர் பெருக ஸ்தம்பம்போல் நின்றுவிட்டார். அமிருதவல்லியம்மாள் மூர்ச்சையாகிய உடனே இந்திராவும் சந்திராவும் ஓட்டமாக ஓடி அவளைத் தூக்கிக்கொண்டு வந்து வெளியில் கிடத்தி சிகிச்சைகள் செய்வதில் நரஸிம்மனை கவனிக்கவில்லை.

பிறகு சிறிது தெளிவு உண்டாகியதும் அமிருதவல்லியம்மாள் ஆவேசங்கொண்டவளைப்போல் எழுந்து ஓடிவந்து தன் கணவனின்

காலில் விழுந்து வணங்கி அவன் கால்களைக் கட்டிக்கொண்டு, "ஸ்வாமி!...ஸ்வாமி!...சந்திராவின் பெற்ருேருடையவும் சந்திராவினுடையவுமான அன்பே, இந்த விசித்திரமான ஆலயமாகக் கிடைத்திருக்கிறது. இந்த அதிசயத்தை என்னால் தாங்கவே முடியவில்லை. பகவானின் வாத்ஸல்ய குணவிசேஷத்தை நிதர்சனமாக நம் போன்ற பாமரமக்கள் கவனிக்கும் பொருட்டுத்தான் இந்த திவ்ய லீலையைக் காட்டியிருக்கிருர். இந்த கோயிலில் நான் தவருது திருப்பணிசெய்ய அனுக்ரகிக்கவேண்டும். ஆதிகாலத்துச் சரிதைபோலல்லாது எனக்கு உரிமை கொடுக்கவேண்டும். பகவானுக்குச் செய்யும் கைங்கர்யம் ஈடிணையமே இல்லை. அது இலேசில் கிடைக்கும் பொருளல்ல. என்னைப் பிறர் எது சொன்னாலும் சொல்லட்டும். என்னை இனி தடைசெய்யமாட்டீர்களே...என் மனேபீஷ்டத்தை நிறைவேற்றுவீர்களா!" என்று கெஞ்சும்போது நாஸிம்மனின் கண்களில் மளமளவென்று ஜலம் வந்துவிட்டது.

மிகவும் இளகிய மனத்தையுடைய சிறுமிகள் இருவரும் அப்படியே தம்பித்துப்போனார்கள். நாஸிம்மன் அமிருதவல்லியைத் தூக்கி நிறுத்தி, "அம்ருதா! இனி உனக்கு நான் கட்டளையிடும் காரியம் ஒன்றுமில்லை. என்னையே நீ திருத்தி வழிபடச் செய்ய வேண்டும் என்று உன்னையே நான் கேட்டுக்கொள்கிறேன். பகவானின் வாத்ஸல்ய குணத்தின் வைபவத்தை அறிந்தேன். இக் கோயிலை நாம்மட்டும் சேவிக்கும் பிரத்யேகக் கோவிலாகச் செய்யாமல் இத் தோட்டத்தில் ஒரு புறம் வழி உண்டாக்கி கோயிலில் சகல ஜனங்களும் சேவித்து இன்புறும்படிச் செய்துவிடலாம்.

தினம் பூஜை செய்ய ஒரு குருக்களை நியமித்து அதற்கான சகல ஏற்பாடுகளும் செய்துவிடலாம். வலிய கிடைத்த செல்வத்தை இனி இழக்கமாட்டேன். க்ரகப்ரவேசத் தன்றே கோயிலின் திறப்பு விழாவும் செய்துவிடலாம். தினம் காலை மாலை பூஜை, சாயங்காலத்தில் தவருது பஜனை ப்ரதி வெள்ளிக்கிழமையிலும் ப்ரத்தியேகமாக பெண்களின் பஜனை இத்தனையும் ஏற்பாடு செய்துவிடுகிறேன். பயப்படாதே. குமாரசாமியின் பரிசுத்த இதயத்தின் ஜோதி இப்போதுதான் தெரிகிறது உன்னைதரிசிக்க அவன் காத்துக் கிடந்தான். நான் உன் மகிமையறியாது சிறையிலிட்டுச் சிறுமைப் படுத்தினேன். அவனுடைய ஆத்மா கோயிலிலேயேதான் நித்தியமான இடம் பெற்று வீற்றிருக்கும். அமிருதா! கவலைப்படாதே" என்று வெகு அன்புடன் கூறினர்.

இதைக்கேட்ட உடனே எல்லோருடைய உள்ளத்திலும் இன்ப ஊற்று சுறந்தது. ஆனந்தப் பூரிதர்களாக எல்லோரும் அங்கு கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் பகவானைச் சேவித்தார்கள். சந்திராவின் ஆனந்தம் கரைபுரண்டது.

# 5

முகத்தில் இயற்கையாக பகவான் கொடுத்திருக்கும் அழகு அப்படியே பிரகாசிக்கின்றதெனினும் மனத்தில் உள்ளூற வாட்டும் கவலையால் அழகே குறைந்துவிட்டதுபோன்ற ஒரு சோகக்களை குடிகொண்டிருந்தது. ஸ்ரீதரனைப் பார்க்கும் அவனுடைய நண்பர்கள் ஒவ்வொருவரும் "என்னடா உடம்பு! ஏதோ மாதிரி இருக்கிறயே! இத்தனை நாள் ஏன் காலேஜுக்கு வரவில்லை! ஒருவேளை எங்களுக்கெல்லாம் திடீரென்று கல்யாண அழைப்பு வருமோ என்றுகூட சந்தேகித்தோமே! லீவு வாங்கியது கல்யாணத்திற்கா! உடம்பு அசவுகரியத்திற்கா! உன்னைப் பார்த்தால் கல்யாண மாப்பிள்ளைபோல் காணவில்லையே!" என்று கேட்டார்கள்.

ஸ்ரீதரனுக்கு உண்மையில் உடம்பில் எவ்விதமான வியாதியுமில்லை. இவர்கள் நினைப்பதுபோல் கல்யாணமும் இல்லை. ஒவ்வொருவருடைய குடும்பத்திலும் எத்தனையோ குறைகள், சங்கடங்கள் கஷ்டங்கள் இருக்கலாம்; அதன் பயனாக சிலருக்கு மூளையே கலங்கிப்போவதுமுண்டு. சிலருக்கு உயிரும் போய்விடும். சிலருக்கு அதிர்ச்சியால் நரம்புகள் தளர்ந்து பக்கவாதம் வருவதும் உண்டு. கவலையின் கொடுமை யாட்சியில் கட்டுண்டு தவிக்கும் ஆத்மாக்கள் உலகில் எண்ணிறந்ததாக இருக்கின்றன.

"உண்ண ஒரு குவளை கஞ்சி இல்லையே?" என்று ஒரு ஆத்மா தவிக்கின்றது. உண்ட ஆகாரம் ஜீர்ணிக்கவில்லையே! அதற்கொரு டாக்டரிடம் ஜீரணம் மருந்து சாப்பிடலாமா! ஐயோ! இப்படி ஜீரணமே குறைந்துவிடுமா!" என்று ஒரு ஆத்மா அங்கலாய்க்கிறது.

ஒரு குழந்தை பெறுவதற்கு கண்டகண்ட பிரார்த்தனைகளையும் செய்து தவமிருந்து வ்ருதாதிகள் அனுஷ்டித்துக் கண்ணீர் விடுகிறது ஒரு ஜீவன். "ஐயோ! இப்படியும் குழந்தைகளைக் கொடுத்து சோதித்தால் என்ன செய்வேன்! கடவுளே! பிறக்கும் குழந்தைகளுக்கு அல்பாயுளாவது போடக்கூடாதா! ஒன்றுக்குக்கூட சாவு வரவில்லையே! எல்லாம் கொட்டாப் புளிபோலிருக்கிறதே!" என்று கதறுகிறது ஒரு உயிர். இந்த ரகத்தில் சேர்ந்த சிலர் குழந்தைகளை மனந் துணிந்து விற்கவும் துணிகிறார்கள்.

இதுபோல் பதினாயிரம் அவஸ்தைகள் இருக்கின்றன. அவரவர் கவலை அவரவருக்கு. ஸ்ரீதரனின் கவலை பிறரிடம் சொல்லி ஆறுதலடையும் கவலையேயல்ல. இவர்களிடம் பேசவும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அன்புடன் கேட்பதற்குப் பதில் பேசாது போனால் வீண் மனஸ்தாபமல்லவா வரும். அதோடு தனக்கு உடம்பு சரியில்லை என்கிற சாக்கு வைத்துதான் லீவு வாங்கியிருந்தான், ஆதலால் அந்த பல்லவியையே பாட தீர்மானித்து, என்னைப் பார்க்கும் போதே சீக்காளி என்பது தெரியவில்லையா! ஒருவாரமாக ஜுரம்

வயிற்றுக் கடுப்பு; இன்றுதான் சற்று தேவலே. அதனல் அட்டெண் டென்ஸாவது கொடுக்கலாமென்று வந்தேன்'' என்ருன்.

"அடாடா! உன்னைப் பார்க்கும்போதே தெரிந்தது. ஐயோ பாவம்! ஆள் பாதியாகிவிட்டாயே! சரியானபடி மருந்து சாப் பிடு'' என்று ஆறுதல் கூறிச் சென்ருர்கள். இதை சற்றுதூரத்தி லிருந்து கேட்டுக்கொண்டிருந்த சந்திராவுக்கு, ஸ்ரீதானுக்குச் சீக் கென்றதும் தூக்கிவாரிப்போட்டது. "வயிற்றுக் கடுப்பு, ஜுரம் என்ருல் மிக்க கஷ்டமாயிற்றே! அதான் இத்தனை வாடிவிட்டார்'' என்று எண்ணியபடியே எதிரே வந்தாள்.

இவள் வருவதைக்கூட பார்க்காமல் ஸ்ரீதரன் கவலை தோய்ந்த முகத்துடன் மேஜைமீது தலையைக் கவிழ்த்துக்கொண்டு முழங் கையில் முகத்தை ஊன்றியபடியே ஆலோசனையிலாழ்ந்திருந்தான். சந்திரா பின்னல் போய் சிலநிமிஷம் பேசாமல் நின்று பார்த்தாள்.

ஸ்ரீதரன் பெருமூச்சு விடுவதைத் தவிர வேறு ஒன்றும் அசையவே இல்லை.'மிஸ்டர் ஸ்ரீதர்! இதென்ன தபஸ் செய்கிறீர்களா! அருகில் ஆள் வந்தது கூடத் தெரியவில்லையே! உடம்பு ஏதாவது அசௌகரியமா! ஒரு வாரம் லீவுஎடுத்த காரணம் தெரியாது திண்டாடினேன்' என்று கூறி முடிப்பதற்குள் ஸ்ரீதரன் வெகுப் பிரயாசையுடன் சமாளித்துக்கொண்டு, "ஓ! சந்திரா தேவியா? உட்காரு...ஆமாம்! உடம்பு சரியில்லாததால் லீவு எடுத்துக் கொண்டேன்; இன்று தேவலே. உன் முகத்தில் அபாரமான சந்தோஷம் தாண்டவமாடுகிறதே! என்ன விஷயம்!''என்ருன்.

சந்தி:—விசேஷம் இருப்பதால்தான் உங்களை ஒரு வாரமாகத் தேடித் தேடி ஏமாற்றமடைந்தேன். எங்கப்பா ஒரு அபூர்வமான புதிய பங்களாவை எனக்காக வாங்குகிருர். அதைப் பார்த்து ஆனந்தமடைவதற்காக முதலில் உங்களை அழைத்துச் செல்ல வேண்டும் என்று வெகு ஆவலாக இருந்தேன். நினைத்தபடி நடப்பதுதான் அரிதாக விருக்கிறதே. அடுத்தமாதம் க்ரகப்ரவேசம் செய்யக்கூடாதாம். ஆதலால் வெகு விரைவாக பங்களா வாங்கி யாகிவிட்டது. அதில் நாங்கள் இக்கலியிலேயே கண்டிராத அதிசயத்தைக் கண்டு பூரித்தோம். அதையாவது நீங்கள் பார்ப்ப தற்கு வரவேண்டும். நீங்கள் பார்த்தால்தான் என் மனம் மகிழும்.

ஸ்ரீதர:—பங்களா வாங்கினீர்களா! மெத்த சந்தோஷம். எந்த ஊரில் வாங்கினீர்கள்? ப்ரம்மாண்டமானதா! என்ன அதிசயம் அதில் கண்டீர்கள்?

சந்:—அதிசயம் என்று மட்டும் சொன்னல் போதாது. இக் கலியுகத்தில் யாரும் கண்டிருக்கவே முடியாத அதி விசித்திரமான காக்ஷியை நாங்கள் கண்டோம். எங்கள் பங்களாவில் புதிதாக கிணறுவெட்ட ஆரம்பித்தோம். அதில் ஜலம் வராது ஒரு அற்புத மான கோயிலும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் சிலையும் இருப்பதைக் கண்டு ஆனந்தப் பூரிப்படைந்தோம்.

ஸ்ரீதர:—என்ன! என்ன! பங்களாவிற்குள் கோயிலா! உண்மையாகவா! என்ன ஆச்சரியம்! அத்தகைய சிரேஷ்டமான பங்களாவை எங்கு வாங்கினீர்கள்?

சந்:—இதோ பாருங்கள் கிரகப்ரவேச அழைப்புக் கடிதம். இன்னும் 5 நாட்கள் இருக்கின்றன. ஸ்ரீதரர்! நான் பிரத்தியேகமாக உங்களை இன்றைக்கே நேரில் அழைக்கின்றேன். கடிதம் ஒப்புக்காகவும் பக்களாவின் விலாஸம் தெரிவதற்காகவும் கொடுத்திருக்கிறேன். என் தாயாரின் பெயரிலேயே பங்களா வாங்கியிருப்பதால்அவர்கள்பெயராலேயே, "அமிருதபவன்" என்று சலவைக் கல்லில் செதுக்கி பதித்திருக்கிறோம். பங்களாவின் அழகைச் சொல்லமுடியாது. அதற்கு இன்னும் அழகு செய்திருக்கிறோம். நீங்கள் இன்றே என்னோடு வந்து முதலில் பார்க்கவேண்டும். பிறகு கிரகப்ரவேசத்தன்று எங்களுடன் கூடவே இருக்கவேண்டும்.... என்ன ஸ்ரீதரர்!...நான் மட்டும் மெஷின்போல் பேசிக்கொண்டே போகிறேன். நீங்கள் பதிலுக்குத் தலையைக்கூட அசைக்காமல் சமாதி நிலையை அடைந்திருக்கிறீர்களே! அத்தகைய ஆழ்ந்த யோசனைக்குக் காரணம் என்ன?

ஸ்ரீதரனுக்குப் பதில் பேசவே தெரியவில்லை. சந்திராவின் அழைப்புத்தாளைக் கையில் வாங்கியவன் அப்படியே தம்பித்துப் போய் ஏதேதோ யோசனையில் மூளை சிதறிவிட்டான். அந்த நிலைமையில் இன்னும் சிறிது நேரம் இங்கிருந்தால் சந்திராவுக்குப் பதில் சொல்லமுடியாது போய்விடும் என்று தோன்றியதால் சிறிது மவுனம் சாதித்தான். 'சந்திரா வரப்போகிறாளா!' என்று காத்துக் கிடந்தவனுக்கு 'இன்று இந்த நிமிஷம் அவளை விட்டுப் போய்விட மாட்டோமா!' என்று ஒரு உணர்ச்சி தோன்றியதால், சந்திராவை இரக்கத்துடன் பார்த்தான். அவனை யறியாது கண்ணீர் தடதடவென்று வந்துவிட்டது. அதை மெல்ல சமாளித்துக் கொண்டு 'சந்திரா! என்னை மன்னித்து விடைகொடுத்தனுப்பு. நாளை நான் உன்னைச் சந்திக்கும்போது பேசுகிறேன். எனக்கு மயக்கம் வரும் போலிருக்கிறது. நான் வீட்டிற்கு சீக்கிரம் போய்விடுகிறேன். வித்யாசமாக நினைக்காதே. சந்திரா! கோபிக்காதே'...என்று கூறிய படியே பதிலுக்கு எதிர்பார்க்காது தடதடவென்று போகையில்,

"ஸ்ரீதர்! ஸ்ரீதர்! நில்லுங்கள்; நில்லுங்கள்! ஒரேஒரு வார்த்தை" என்று கூறியபடியே ஓடினாள். ஸ்ரீதரன் சற்று தியங்கியபடியே நின்றான். சந்திரா எதிரில் வந்து "ஸ்ரீதர்! இப்படி உட்காருங்கள். என் கார் இப்போதே வந்துவிடும். நீங்கள் நடந்துபோகவேண்டாம். வண்டியில் போகலாம். நாம் சினேகமாகி இத்தனை நாட்களில் ஒருநாள்கூட நீங்கள் என் வண்டியில் ஏறியதில்லை. எங்கள் வீட்டிற்கும் வந்ததில்லை. நானும் அப்படியே. உங்கள் வீடு எங்கிருக்கிறது என்றுகூட எனக்குத் தெரியாது. அப்படியே தான் என் வீடு எங்கிருக்கிறது என்பதை நீங்கள் கேட்டதே இல்லை,

எத்தனை நாளைக்கு இப்படியே மூடிவைத்திருக்கமுடியும்? என்றைக் காவது நமது பெரியோர்களுக்கு விஷயத்தைச் சொல்லித்தானே ஆகவேண்டும். சிலரைப்போல் நாம் அநாகரீகமாகப் பழகாததால் நம் பெரியார்களுக்கு விஷயமே தெரிவதற்கு நியாயமில்லாது போயிற்று. ஆகையால் நீங்கள் கிரகப்ரவேசத்திற்கு வரும்போது என் தகப்பனருக்கு அறிமுகப்படுத்திவிடுவதாகத் தீர்மானித்திருக் கிறேன். நாளை முதல் ஒரு வாரம் லீவு வாங்கியிருக்கிறேன். ஆதலால் நான் நாளை உங்களை பார்க்க முடியாது. உங்களை மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் கட்டாயம் க்ரகப்ரவேசத்தன்று காலையிலேயே வந்துவிடவேண்டும். உங்களை வெகு ஆவலுடன் எதிர்பார்ப்பேன். அதோ ஹாரன் கேட்கிறது. என் வண்டியும் வந்துவிட்டது" என்று கூறி முடிப்பதற்குள் கார் கட்டிடத்து வாசலில் வந்து நின்று ஹாரன் கொடுத்தது.

சந்திராவின் வார்த்தைகளைக் கேட்கக் கேட்க ஸ்ரீதரனுக்கு அவனையறியாது மனத்தில் ஏதேதோ உணர்ச்சியுண்டாகி கலக்கு கிறது. தன்னுயிரின் ஜீவநாடிபோன்ற சந்திராவை விட்டுப்போகவும் மனமில்லை; நிற்கவும் முடியவில்லை. "சந்திரா!...நான் மறுபடியும் மன்றாடிக்கேட்டுக்கொள்கிறேன். என்னை இன்று வற்புறுத்தாதே! நான் போய்வருகிறேன். எனக்கு தலை சுற்றுகிறது. உன் அழைப் புக்கு மிகவும் சந்தோஷம். நான் வருகிறேன்" என்று கூறியவாறு பின் பக்கத்துத் தோட்டத்தில் நுழைந்தான்.

சந்திராவுக்கு ஸ்ரீதரனுடைய மாறுதல்களும் தியக்கமும் இன்ன தென்று புரியவே இல்லை. இன்று அவனுடைய நடத்தையே ஏதோ புதியதாகத் தோன்றியதால் அவளுக்கு ஒருமாதிரி கலக்கமுண் டாகியது. 'உண்மையில் ஏதாவது உடம்பு வந்துவிட்டதோ! மயக்கம் போட்டு நடுவழியில் விழுந்துவிடுவாரோ! எதனால் இத்தகைய மாறு தல் வந்திருக்கிறதோ தெரியவில்லையே!' என்று மன அதிர்ச்சி உண்டாகியது. ஒருபோதும் ஸ்ரீதரன் இம்மாதிரி நடந்து கொண் டதே இல்லை யாதலால் இதே கலக்கத்தில் சந்திரா கார் வந்ததையும் மறந்து ஸ்ரீதரன் சென்ற திக்கையே ஜன்னலால் பார்த்துக்கொண்டு நின்றாள். மனது அந்த திசையிலேயே லயித்துவிட்டது.

## 6

ஒருதரம், இரண்டு தரம் என்று நாலைந்து தரம் கார் ஹாரன் அடித்துவிட்டது. ஜன்னலைப் பிடித்துக்கொண்டு தன்னை மறந்து நிற்கும் சந்திராவின் பின்னால் நாலைந்து குறும்புக்கார மாண வர்கள் கபகபவென்று சிரிக்கும் ஓசை கேட்டபிறகுதான் சந்திரா துள்ளியவாறு திரும்பிப் பார்த்தாள்.

'அசல் பட்டணம் சோதா!' என்று கூறுவதற்கு ஒப்ப அந்த தடியர்கள் சந்திராவைப் பார்த்ததும், "அடாடாடா! ஸ்ரீதரன் தலை

மறைந்துவிட்டதே! இன்னேரம் அவன் பஸ்ஸில்கூட ஏறியிருப்பானே!" என்று வேண்டுமென்று கூறிக்கொண்டே போனார்கள். சந்திரா காலேஜுக்குப் படிக்க வந்தபிறகு இம்மாதிரியான ஒரு ஏளன சம்பவம் நடப்பது இதுதான் முதல்தடவையாகுமாதலால் அவள் தேகம் வெட்கத்தினாலும், கோபத்தினாலும் படபடத்தது.

சாபங் கொடுக்கும் தேவதையைப்போல் அந்த போக்கிறி மாணவர்களை ஒரு விழிப்பு விழித்துப் பார்த்தாள். வாய் திறந்து ஒன்றுமே சொல்லாமல் காறித் துப்பியவாறு விற்றென்று வீதிக்கு வந்தாள். இவள் வரும் வேகத்தையும் முகக் கடுப்பையுங் கண்டு இந்திரா சற்று சுளித்த முகத்துடன் "என்ன சந்திரா! போகிற தடியனும் வருகிற தடியனும் பார்க்கவே பிடிக்கவில்லை. இதற்காகத்தான் அப்பாவுக்கு இம்மாதிரி காலேஜுக்கு அனுப்ப இஷ்டமில்லாது என்னை அனுப்பவில்லை. காரில் எத்தனை நேரம் உட்கார்ந்திருப்பது. எனக்கு மிகவும் கஷ்டமாகிவிட்டது. அப்போதிலிருந்து ஹாரனடித்தும் உனக்குக் கேட்காது போய்விட்டதா! இன்னேரம் என்ன செய்தாய்? மணி 5 அடித்துவிட்டதே. 5-45க்கு வண்டி வருகிறது. அதில் உங்க அத்திம்பேர் வருகிறார் என்று இன்று தந்தி வந்தது. உடனே கார் கொண்டுபோய் அழைத்து வரும்படி அப்பா சொன்னார். நேரமாகிவிட்டது பாரு" என்று சற்று சிடுசிடுப்பாகவே சொன்னாள்.

இதைக் கேட்ட சந்திரா அசந்துவிட்டாள். 'அக்கா! மன்னிக்க வேணும். ஏதோ புத்தகத்தைப் பார்த்துக்கொண்டே இருந்துவிட்டேன். அதன் ஸ்வாரஸ்யத்தில் ஹாரன் ஓசையைக் கேட்கவில்லை. அதோடு அத்திம்பேர் வருவதே எனக்குத் தெரியாது. இதோ போய்விடலாம். உன் மாமியார் மாமனார் வரவில்லையா!" என்றாள்.

இந்தி:—அவர் வருவது தந்தியைப் பார்த்த பிறகுதானே தெரிந்தது. சரி. ட்ரைவர்! நேரே ஸ்டேஷனுக்குப் போ!...உனக்கு லீவு கேட்டாயிற்று!

சந்தி:—ஓ! ஒருவாரத்திற்கு லீவுதான். நாளையே நாம் ஊரழைக்க ஆரம்பிக்கலாம். உனக்குத் தெரிந்த சினேகிதைகள் எல்லோரையும் அழைக்கலாம். என் காலேஜ் சினேகிதர்களை எல்லாம் அழைக்கலாம். உன் கல்யாணத்திற்குப் பிறகு இதுதானே நம்ப வீட்டில் வரும் விசேஷம். இதை வெகு வெகு நன்றாகச் செய்ய வேண்டும்—என்று வெகு பொறுமையுடன் பதிலளித்தாள்.

கார் ஸ்டேஷனை அடைந்ததும் இருவரும் இறங்கி வண்டி வரும் ப்ளாட்பாரத்திற்குச் சென்று வழி பார்த்துக்கொண்டிருந்தார்கள். நரஸிம்மனும் ஆபீஸிலிருந்து நேரே ஸ்டேஷனுக்குக் கணக்காக வந்தார். குறித்த நேரத்தில் வண்டி வந்தது. இரண்டாவது வகுப்பிலிருந்து வெகு கம்பீரத்துடன் இந்திராவின் கணவனாகிய சேகரன் இறங்கியதைக்கண்டு உள்ளம் பூரித்த மாமனார் அவனுக்கு கை குலுக்கி வரவேற்றார். இந்திராவின் தேகம் பூராவும் சந்தோஷ

83076

உணர்ச்சியினல் புலகிதமடைந்து ஆனந்த பிம்பமாகத் தன் அன்பு பூராவும் விழிகளால் கொட்டியபடியே கணவனை நோக்கினள்.

களங்கமற்ற கன்னிகையாகிய சந்திரா அவளது சுபாவிக மான கலகலத்த நகைப்புடன் "வாருங்கள்! வாருங்கள்! அத்திம் பேரே! மாமி, மாமா ஏன் வரவில்லை? உங்கள் நாய்க்குட்டி எங்கே?" என்று கேட்டாள்.

சேகர் சிரித்தபடியே "அப்பா அம்மா எல்லோரும் கல்யாணத் திற்கு முதல் நாள் வருவார்கள். என்ன சந்திரா! நீ பார்க்கும் போது குட்டியாயிருந்த நாய் இப்போது தாயாகிவிட்டது. அதன் குட்டியை விட்டு வருமா! அதனல் நான் மட்டுந்தான்வந்தேன். உன் கல்யாண சாப்பாடுதான் முதலில் கிடைக்குமென்று நினைத் தேன். அதற்குள் ஒரு சாப்பாடு கிடைத்துவிட்டது. எப்போது உனக்குக் கல்யாணம்?" என்றான்.

சந்:—போங்கோ அத்திம்பேர்! எப்ப பார்த்தாலும்கல்யாணந் தான? வாருங்கள்; வண்டிக்குப் போகலாம். ட்ரைவர்! சாமான்களை காரில் ஏற்று.—என்று பெரிய அதிகாரம் செய்தாள்.

சேக:—என்ன இந்திரா! மவுனம் சாதிக்கிருய்? சவுக்யமா! கோயில் மெழுகி கோலம் போட்டாயிற்ரு!—என்று குத்தலாகக் கேட்டான்.

சந்தி:—அத்திம்பேரே! கோயில் மெழுகிக் கோலம் போட்டதனல் தான் உங்களுக்கு பெரிய உத்யோகம் கிடைத்ததாம். பகவானே எனது சொப்பனத்தில் சொன்னர். பகவானுக்குச் செய்யும் கைங்கர்யம் இழிவானதா.. அக்காவுக்கு உங்களைப் பார்த்த சந்தோஷம் அப்படியே தம்பித்துவிட்டது. மவுனம் ஒன்றுமில்லை. ஒரு கப்பல் பேச்சு பேசுவாள்.

நரஸி:—சந்திரா! கல்யாண காலத்தில் பரிகாஸம் செய்ததுபோ லவே நீ இப்போதும் செய்யலாமா! அப்போதையவிட நீ பெரியவ ளாகி விடவில்லையா! மாப்பிள்ளைக்கு பிடிக்காத வேலையை ஏன் செய்யவேண்டும்? அன்றே நிறுத்திவிட்டாள்.—என்று கூறிக் கொண்டே நால்வரும் வண்டியில் ஏறிக்கொண்டார்கள். சந்திராவே வண்டி ஓட்ட வாரம்பித்தாள்.

மாப்பிள்ளைக்கு உபசாரங்களும் தடபுடல்களும் கூறத்திறமே இல்லை. கணவனுடன் சதாபேசிக்கொண்டிருக்கும் திருப்பணியிலீடு பட்டு ஆனந்தத்தில் மூழ்கிக் கிடப்பதால் ஊரழைப்பதற்குசந்திராவும் அமிருதவல்லியின் சகோதரியுமே ஆரம்பித்தார்கள். தன் மகளும் மருமகனும் இருக்கும் அன்யோன்யத்தைக் கண்டு அமிருதவல்லி யம்மாள் உள்ளம் பூரித்தாள்.

நான்கு நாட்களும் நான்கு நிமிடமாக ஓடிவிட்டன. கிரகப்ர வேசத் தன்று கட்டாயம் ஸ்ரீதரன் வருவான் என்கிற ஒரு நம்பிக் கையும் சந்தோஷமும் சந்திராவின் உள்ளத்தில் கொந்தளித்துக்

கொண்டேயிருக்கிறது. அந்த ஒரு புதிய சக்தியின் வேகத்தினுல் மெஷின்போல் அவள் சுறுசுறுப்பாக வேலைசெய்து வந்தாள்.

கிரகப்ரவேச மகோத்ஸவமும் கோயில் புதிய திறப்புவிழாவும் ஒருங்கே ஒரேமுகமாக நடந்தேறியது. நாற்றுக்கணக்கான பந்துக்களும் ஆயிரக் கணக்கான சினேகிதர்களும் அமிருத பவனத்தில் கூடிவிட்டார்கள். உயர்ந்த மேளக் கச்சேரியும், பாட்டுக் கச்சேரியும் தடபுடலாக நடக்கிறது. மாமனுரும் மருமகப்பிள்ளையும் வரும் விருந்தினர்களையெல்லாம் உபசரித்து விருந்து சாப்பிடச் செய்து தடபுடல் செய்கிருர்கள்.

ஆயிரக் கணக்கில் ஜனங்கள் வருவதும் பங்களாவைப் பார்த்து சந்தோஷப்பட்டுப் பேசுவதும், கோயிலைக் கண்டு பிரமிப்பதும் கணக்கில்லை. சந்திராவின் கண்களுக்கு அக் கூட்டம் ஒரு பொருட்டாகவே படவில்லை. "ஸ்ரீதரன் வருகிருனு!" என்கிற பேராவல் ஒன்றே அவளுடைய இதயத்தை முற்றுகையிட்டுக்கொண்டதால் யார்வரும்போதும், இவர் ஸ்ரீதரனுயிருக்குமோ! அந்த காரில்வருவது ஸ்ரீதரனுயிருக்குமா? என்று எதிர்பார்த்துப் பார்த்து விழியும் பூத்துவிட்டது.நேரம் ஏற ஏற ஜனங்கள் ஏராளமாக வந்து சேரவாரம்பித்தனர். சந்திராவின் உத்ஸாகமும் சுறுசுறுப்பும் தானுகவே அடங்கின.

"அன்று அவர் நடந்துகொண்ட மாதிரியையும் இன்று வராதிருப்பதையும் நோக்கினுல் ஏதேதோ சந்தேகங்களும், பயமும் உண்டாகிறதே. என்னுடைய அழைப்பை திரஸ்கரிப்பார் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லையே! என்ன காரணமோ! உடம்புதான் சரியில்லையோ! என்ன பயித்தியக்காரத்தனம் செய்தேன். அவருடைய வீட்டையாவது தெரிந்து வைத்துக்கொண்டேனு! என் முட்டாள்தனத்தை என்னவென்பது? யார் யாரோ! வருகிருர்களே! என் பிரிய ஸ்ரீதரன் வரக்கூடாதா! என் மனக்கோட்டை முற்றும் இடிந்துவிட்டதே! நான் மறுபடியும் அவரை காலேஜில் பார்த்த பிறகுதான் எனது கவலை தீரும்" என்றெல்லாம் யோசனையிலாழ்ந்திருக்கும் நிலைமையில் இதுபரியந்தம் எந்திரம்போல் வேலை செய்துகொண்டிருந்த வேகம் குறைந்து சோர்ந்து உட்கார்ந்தாள்.

இந்திரா என்றுமில்லாத சந்தோஷ பிம்பமாக காக்ஷியளிக்கிருள். சந்திரா ஒருமாதிரியாக விருப்பதைக் கண்டு அலுத்துப்போனதாகவே எல்லோரும் நினைத்தார்கள். இரவு 11-மணிக்குமேல் எல்லோரும் தம்தம் படுக்கைக்குச் சென்றுர்கள். சந்திராவுக்கு மட்டும் தூக்கமே வரவில்லை. இத்தனை ஆடம்பரமாக நடந்த கிரக ப்ரவேசம் முற்றும் ஸ்ரீதரன் வராததால் சப்பென்று ஆய்விட்டது.

"என்ன காரணமாகவிருக்கும்? ஏன் வரவில்லையோ தெரியவில்லையே!" என்கிற எண்ணமே மனத்தில் போராடி வதைக்கின்றது. ஸ்ரீதரனைத் தான் ஆதியில் கண்ட நாள் முதல் இன்றளவும் அளப்பரிய பிரேமை கொண்டிருந்த உணர்ச்சி ஒரு தனித்ததாயும் இன்று அவன் வராததால் உண்டாகும் ஏமாற்றமும் அவனை நினைக்கும்

போதே உண்டாகும் புதிய மன எழுச்சியும் அவளுக்கு நூதன மாகவே இருந்தது. இத்தகைய நூதன மாறுதலின் வேகம் அதி கரிக்க, ஸ்ரீதரனை எப்போது காணலாம்? எப்போது அவனுடைய விஷயத்தை அறிவோம்! என்றெல்லாம் மனக் கடலில் அலைமோது கிறது. இந் நிலைமையில் அவள் அதிக நேரம் தூங்காது தவித்துப் பின் அயர்ந்து தூங்கிவிட்டாள்.

தினம் அதிகாலையில் எழுந்திருக்கும் சந்திரா 7 மணியாகியும் எழுந்திராததால் "முதல் நாளைய அலுப்பு, அயர்ந்து தூங்குகிறுள்" என்று எல்லோரும் பேசிக்கொண்டார்கள். சேகர் மட்டும் "ஐயோ பாவம்! சந்திராவை எழுப்பாதே. நேற்று முழுதும் ஓடி ஓடி அலைந்து களைத்திருக்கிருள். அவள் செய்ததுபோன்று சுறுசுறுப்பான வேலை நீ கூடச் செய்யவில்லை" என்று தன் மனைவியிடம் பலதரம் கூறிய தானது ஏற்கெனவே சற்று முன்கோபமும் துராங்காரமும் உள்ள இந்திராவுக்குச் சுறுக்கென்று தைத்தது.

முகம் சுருங்கி சிவந்தது. அதேபோல் அமிருதவல்லியம்மாளும் சொல்லியதால் இந்திராவின் கோபம் பின்னும் கொழுந்துவிடவாரம் பித்தது. தாயிடம் சிடுசிடென்று முகத்தைக் காட்டினுள்.

மணி 7 ஆகிவிட்டதே என்று சந்திரா அலறியவாறு எழுந்து வந்தாள். "ஏண்டீயம்மா! உதயமாயிற்று! உன்னுடையது என்று தனி பங்களா வாங்கியதால் அதில் தூங்கும் ஆனந்தத்தில் உதய மாவதே தெரியவில்லை. அஸ்தமித்துகூடப் போய்விடுமோ என்று நினைத்தேன். நேற்று வரமுடியாதவர்களெல்லாம் இப்போது காலை யிலேயே வந்து போகிருர்கள். 'சந்திரா எங்கே! எங்கே!' என்று கேட்டதற்குப் பதில் சொல்லத் தெரியாது விழித்தேன். கல்யாணங் கழித்த மறுதினமேவா இப்படி தூங்குவது? அதோ! உங்கள் காலேஜ் ப்ரொபெஸர் வருகிருர்' என்று கடுகடுத்துக் கூறினுள்.

உண்மையில் சந்திராவுக்குத் தான் தூங்கிவிட்டது வெட்க மாயும் கவலையாயும் இருந்ததால் "அக்கா! மன்னிக்கவேண்டும். கோபிக்காதே! இரவு வெகு நேரம் தூக்கம் வரவில்லை. உடம்பெல் லால் வலியாகவிருந்தது. நாலு மணிக்குமேல்தான் தூங்கினேன். யார் யார் வந்தார்கள்" என்று பதறப்பதறக் கேட்டாள். 'ஒருக்கால் ஸ்ரீதரன் வந்திருப்பானே!' என்று மனத்தில் கலக்கம் உண்டாகியது.

இந்:—யார் யாரோ வந்தார்கள். உன் காலேஜ் மாணவர் களில் மூன்று பேர் வந்தார்கள். சந்திரா தேவியிடம் சொல்லுங்கள் என்றுகூட சொல்லிச் சென்றுர்கள்—என்றதைக்கேட்டுப் பின்னும் கலவரம் அதிகரித்துவிட்டது. ஸ்ரீதரன் யார் என்பதே இந்திரா வுக்குத் தெரியாது. அவளிடம் கேட்பதில் பயனில்லை என்று தோன்றியதால் ப்ரொபெஸரை விசாரிக்க உள்ளே ஓடினுள். மரி யாதையுடன் அவரை அனுப்பியபிறகு 'வந்தவர் யாராக இருக்கும்?' என்கிற யோசனையிலாழ்ந்தாள்.

அச்சமயம் சேகர் அங்கு வந்து, "ஓ! எழுந்துவிட்டாயா சந்திரா! ஐயோ பாவம்! நேற்று உனக்கு சரியானவேலை. நல்ல அலைச்சல். இன்னும் இரண்டு நாட்கள் போனால்தான் உடம்பு சரியாகும். சாப்பிட்டாயா?"....என்று கேட்டான்.

சந்:—என்ன அத்திம்பேரே! நான் அதிக நேரம் தூங்கி விட்டேன் என்று பரிகாஸம் செய்கிறீர்களா? காப்பி இன்னும் சாப்பிடவில்லை—என்றாள். அதற்குள் சேகர், 'இந்திரா! இந்திரா! ஐயோ பாவம்! குழந்தை நேற்று மிகவும் அலண்டுவிட்டது. கொஞ்சம் காபி சூடாகக் கொண்டு கொடு. உம்...ஓடிவா!... ஒரு செக்கண்டில் வா! பார்க்கலாம்" என்றான்.

இந்த வார்த்தை இந்திராவின் காதுகளில் நாராசம்போல் பாய்ந்ததால் அவள் அந்த இடத்தைவிட்டு அசையாமல் ஒரு முழி முழித்துப் பார்த்தபடியே, "ஓகோ! கரிசனமும் பரிசலும் அதிகமாயிருக்கிறதே. ஏன் உள்ளே போய் காப்பி சாப்பிடத் தள்ள வில்லையா! போ!...உள்ளே போய் சாப்பிடு...என்னைச் சிபார்சு செய்கிறவர்கள் தானே கொண்டு கொடுப்பதுதானே!" என்று விஷமத்தனத்துடன் கூறினாள்.

சேக:—ஓ! இந்திரா தேவியின் ஆணைப்படி இதோ கொண்டு தருகிறேன். ஐயோ பாவம்! பரமசாது. குழந்தை கபடற்றவள்—என்று கூறிக்கொண்டே நிஷ்களங்கமான இதயத்துடன் உள்ளே சென்று காப்பி கொண்டுவந்து 'இந்தா சந்திரா! சாப்பிடு' என்றான்.

கல்மஷம் இன்னதென்றறியாத சந்திரா அதை வாங்கிக் குடித்துவிட்டு "அத்திம்பேரே! ரொம்ப தாங்ஸ்" என்று கூறிக் கொண்டே மாடிக்குப் போய்விட்டாள். இந்திராவின் முகத்தில் ஜ்வலிக்கும் கோபாக்கினியை அந்த பேதை பார்த்தால் கதிகலங்கி இருப்பாள். சந்திராவின் மனத்தில் வேலை செய்யும் கலவரத்தில் அவளுக்கு வேறு எதையுமே கவனிக்கத்தெரியவில்லை. இன்று லீவுவாங்கி இருப்பினும் ஸ்ரீதரனின் விஷயமறிவதற்காக காலேஜிக்குப் போகக் கிளம்பிவிட்டாள். இவள் அந்தரங்க ரகஸ்யத்தை யார் கண்டது?

'முதல் நாளைய அலுப்பு ஆறட்டும்; இன்று போகவேண்டாம்' என்று சொல்லிப் பார்த்தும் கேட்காது கிளம்பிவிட்டாள். சந்திரா வீட்டிலில்லாது காலேஜுக்குப் போவதே நல்லது" என்று இந்திராவின் உள்ளம் சந்தோஷமடைந்தது.

## 7

"வாருங்கள்! வாருங்கள்! முதலியாரவாள்! நேற்று ஏன் வரவில்லை?" என்று நரஸிம்மன் சந்தோஷத்துடன்கேட்டார். வந்த முதலியார், "இந்த பங்களாதானா?... அடாடா!...நான் 10 நாட்களாக ஊரிலேயே இல்லை. இன்று காலையில்தான் வந்தேன்.

உங்கள் அழைப்புத்தாளைப் பார்த்தேன். உடனே கல்யாணம் விசாரிக்கலாம் என்று வந்தேன்...க்ரகப்ரவேசம் ஆயிற்று!...என்றார்.

நரஸி:—ஆஹா! உங்கள் ஆசியால் வெகு சிறப்பாக ஆயிற்று. வாருங்கள் பங்களா முழுவதும் பார்க்கலாம்.

முதலி:—எத்தனையோதரம் பார்த்திருக்கிறேன். ஏதோ கோயில் திறப்பு விழா என்று போட்டிருக்கிறதே அதென்ன?

நரஸி:—இந்த பங்களாவின் தோட்டத்தில் புதைந்து கிடந்த ஒரு கோயில் வெளிப்பட்டது சார்! பங்களாவைப் பார்க்க வந்தவர்கள் எல்லோரும் இதை வெகு ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

முதலி:—அப்படியா! மெத்த சந்தோஷம். கோயிலைப் பார்க்கலாம் வாருங்கள்—என்றதும் இருவரும் சென்று பார்த்தார்கள். முதலியார் அதிகமான ஆச்சரியப்பட்டுப்பேசவில்லை. முகபாவம் ஒரு தினுசாக இருந்தது. சற்று தயங்கியும் மயங்கியும் பேசத் தொடங்கி, "நான் ஊரிலிருந்திருந்தால் இதைப்பற்றி...." என்று இழுத்து நிறுத்தியதைக்கண்ட நரஸிம்மன் "ஏன்...இதைப்பற்றி என்ன சமாச்சாரம்? ஏதாவது தகராறுகள் உண்டா! மைனர் வியாஜ்யம் முதலிய எதுவுமே கிடையாதே. என்ன விஷயம் சொல்லுங்கள்" என்றார்.

முத:—சார்! மன்னிக்கவேணும். ஒரு காரியம் செய்தபிறகு அதைப்பற்றிச் சொல்லுவது முட்டாள்தனம். ஏதோ ஞாபகமறதியாய் சொல்லிவிட்டேன். தாம்பூலங் கொடுங்கள்; நேரமாயிற்று.

நரஸி:—இல்லை! இல்லை!...காரணத்தைச் சொல்லாது விடப் போவதில்லை. ஒரே வாரத்தில் அவசரமாக நான் முடித்துவிட்டதால் இதைப்பற்றிப் பிறரிடம் கேட்கவே இல்லை. திக்கற்ற பரதேசிக் குழந்தைக்காக வாங்கியிருக்கிறேன். விஷயத்தைச் சொல்லி விடுங்கள். எங்காவது வழக்கு, சச்சரவு இருக்கிறதா!

முத:—இனிமேல் சொன்னால் வீண் மனஸ்தாபம்...சொல்லாவிட்டாலும் விடமாட்டேன் என்கிறீர்கள். வழக்கோ, சச்சரவோ இருந்தால் அதற்கு நீதி ஸ்தலம் இருக்கிறது. அது நியாயத்தைத் தீர்த்துவிடுமே. இந்த வீட்டிலேயே ஏதோ பெரிய கோளாறு இருப்பதாகக் கேள்வி. நான் இதை வாங்குவதற்குத்தான் பிரயத்தனம் செய்தேன். அந்த வீட்டுக்கார அயோக்யன் இதை ஒளித்து வைத்துவிட்டான். அவன் இந்த பங்களாவை வாங்கி வாழவே இல்லை. மனைவிக்குப் பயித்தியம் பிடித்து இதே பங்களாவில் செத்தாள். அவள் கைக்குழந்தை விளையாடும்போது தவறி இதே பங்களா கிணற்றில் விழுந்து செத்தது. இந்த பங்களாவுக்குள் ஏதோ கிரக தோஷம் இருக்கிறதாம். சூன்யம் ஏவல்...என்னமோ சனியன்... சொல்லவே பயமாயிருக்கிறது. முனியோ...காட்டேரியோ இந்த பங்களாவில் இருக்கிறதாம். ஜாக்ரதையாக இருங்கள்—என்றார்.

இதற்குமேல் ஒரு மனிதனின் மனத்தைக் கலக்க வேறு என்னவேண்டும்? நரஸிம்மனுடைய மனது குழம்பி மூளையே கலங்கி

விட்டது. 'வீட்டுக்காரன் சகலத்தையும் மறைத்துத் தனக்கு வீடுவிலை யாகவேண்டியதை மட்டும் பார்த்துக்கொண்டானே! இத்தனை பெரிய தோட்டமும், குளமும், பங்களாவும் 15 ஆயிரத்திற்கு எப்படி வந்தது என்று எல்லோரும் கேட்கும்போது, நாம் வெகு நயமாக அடித்துவிட்டதுபோல் பெருமையடைந்தோமே! இப்போதல்லவா குறைந்தவிலைக்கு விற்ற ரகஸியம் தெரிகிறது. இனி என்னசெய்வது? ஐயோ! மோசம் போனேமே!' என்று இடிந்துபோனர்.

வந்த அஸமஞ்சசம் உளறிவிட்டுத் தாம்பூல சகிதம் போனதுகூட நாஸிம்மனுக்குத் தெரியவில்லை. மனது ஒரே தத்தளிக்கிறது.'எனக்கு ஒரே பெண்ணுயிற்றே! அவளுக்கு என்ன வந்துவிடுமோ...உன் குழந்தைக்கு ஒரு குறைவுமின்றி உன் விருப்பப்படியே நான் காப்பாற்றுகிறேன் என்று அந்திம காலத்தில் வாக்குதத்தம் செய்து கை ஏந்தி வாங்கிக்கொண்ட பரதேசிக் குழந்தைக்கு என்ன வந்துவிடுமோ! மகா உத்தமியான அமிருதவல்லிக்கு என்ன ஆபத்து நேருமோ!" என்று அடுக்கடுக்காக யோசனையின்மேல் யோசனையாகத்தோன்றி வதைப்பதால் அப்படியே உட்கார்ந்துவிட்டான்...

காலேஜுக்குச் சென்ற சந்திரா வெகு ஆவலுடன் ஸ்ரீதரனைத் தேடி யலைந்தாள். ஆனல் ஸ்ரீதரனைக் காணவில்லை. சந்திராவின் பெயருக்கு ஒரு கடிதம் தபாலில் வந்திருந்ததைக் கண்டதும் அதன் கையெழுத்து ஸ்ரீதரனுடையது என்பதை அறிந்து பூரிப்புடன் தனித்த இடத்தில் போய் அதைப் படிக்கலானள்.

"என்னிதய ராணி சந்திராவுக்கு,

என் வரவை நோக்கி எத்தனையோ ஆவலுடன் நீ எதிர்பார்த்திருப்பதை என்னுள்ளம் அறியும். என்னிலைமையை அப்படியே விண்டு காட்டுவதற்கு நான் அசக்தனயிருக்கிறேன். நான் வாரததற்குக் கோபிக்காதே. மன்னித்து விடு. காரணம் அதிகம் எழுதமுடியவில்லை. நீ வெகு ஆனந்தத்துடன் வாங்கி அமிருதபவனம் என்று பெயர் வைத்துள்ள அதே பங்களா உங்கள் கைக்கு வரும் நிமிஷம் வரையில் பகவான் எங்களுடையதாகச் செய்திருந்தார். என் தாயாரின் துர்மரணத்திற்குக்கூட நான் சகித்தேன். எங்கள் விச்ராந்தி (பங்களாவின் பழய பெயர்)யை இழக்கும் துக்கத்தை என்னல் சகிக்கவே முடியவில்லை. என் பங்களாவை விற்கும் கதி எனக்கு வந்தபோதிலும் அதை நீயே வாங்கியிருக்கும் ஒரு சுபச்செய்தியை அன்று உன்னழைப்புக் கடிதத்தால் அறிந்து பேரானந்தமடைந்தேன். கார் இருளுக்குள்ளும் ஒரு மின்வெட்டு தோன்றி மறைவதுபோல் என் கணக்கற்ற வேதனைக்கு மத்தியில் நீ அந்த பங்களாவின் அரசியாக வீற்றிருக்கும் சந்தோஷம் ஒன்றுதான் என்னுயிர் தரித்திருப்பதற்கு பரம அவுஷதயாகும். என்னுடைய கலக்கத்தின் காரணத்தை நீ அறிந்த பிறகு இனி கலக்கமடையமாட்டாய் என்று நம்புகிறேன்.

சந்திரா! என்னாருயிர் சந்திரா! நான் உன்னழைப்பிற்கு வரவில்லை என்று வருத்தப்படமாட்டாயே! என் வீட்டையே நான் விற்றுவிட்டு அதற்கே கிரகப்பிரவேசம் செய்து நான் வருவதென்றால் மனது சகிக்குமா! என்னை அறியாமலேயே கண்ணீர் வரும். என்னை அறிந்தவர்கள் பார்த்தால் பரிகஸிப்பார்கள். அதோடு இன்னொரு முக்யமான விஷயம். நீ உன் தகப்பனாரிடம் என்னைப்பற்றி அறிமுகப்படுத்தப்போவதாயும், நம் அந்தரங்க விஷயத்தைச் சொல்லப்போவதாயும் சொல்லியதைக் கேட்டதும் எனது துக்கம் கரைபுரண்டது. அப்போது அவர் பரிகஸித்துச் சிரிப்பதோடு உன்மீதே பிரமாதமான கோபத்தை அடைந்து வெறுப்பார். அதனால் உனக்கு மிகவும் கஷ்டமாகிவிடுவதோடு ஆபத்துமாகும் என்பதையெல்லாம் நான் தீர்க்கமாக யோசனை செய்துதான் உனக்குபதிலே சொல்லாது போய்விட்டேன். அதனால் நீ எப்படி வருந்தியிருப்பாய் என்பதையும் என்னுள்ளம் அறியும், எங்களுடைய கால நிலைமையின் அலங்கோலம் அறியாது நம்முடைய நேசம் வளர்ந்துவிட்டது. இனி அந்தப் பிரேமைப்பயிர் அப்படியே எரிந்துதான் போய்விடுமோ! என்கிற திகில் என் இதயத்தில் குபீர் குபீரென்று தோன்றி அலறச்செய்கிறது. உன்னுடைய அந்தஸ்தென்ன! இனி எனது நிலைமை என்ன! இக் காரணங்களால் நாம் இனி சந்திக்காதிருப்பதுதான் உத்தமம் என்று தோன்றுகிறதாலும், எனக்கு இனிமேல் படிப்பதற்கு மனது செல்லவில்லை; குடும்ப நிலைமை விடவில்லையாதலாலும் நான் காலேஜுக்கு இனி வரப்போவதில்லை. நீ சர்வ மங்களத்துடனும் வாழவேண்டுமாய் பகவானை வேண்டுகிறேன். நாங்கள் குடும்பத்துடன் நாளையே வெளியூருக்குப் போவதால் இதுவே கடைசீ கடிதமாயும் முதல் கடிதமாயும் ஆகிவிட்டது. வீணாகக் கவலைப்படாது சந்தோஷமாய் இரு. தூரவிருந்து செய்தி அறிந்து நான் இன்புறுகிறேன்.

உன்னைக் கனவிலும் மறவாத,

ஸ்ரீதரன்."

183020

இதைப் படித்தவுடனே அவளுடைய தலை சுழன்றது. 'என்ன! ஸ்ரீதரனின் மங்களாவா! நாம் வாங்கியது அவர் வீடா!...என்ன ஆச்சரியம்!...எனக்கு ஒன்றுமே தோன்றவில்லையே! அவர் பங்களாவை விற்கும் விசனத்தில் மூழ்கித் தவிக்கும்போது நாம் வாங்கும் சந்தோஷத்தில் கொந்தளித்தோமே...அதனால்தான் அவர் அன்று அவ்வாறு நடந்துகொண்டார். அடாடா! என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்" என்று இடிந்தும் பிரமித்தும் தம்பித்தும் போனாள். அவளுக்கு அந்த அதிர்ச்சியில் தன்னையே மறந்து பித்து பிடித்ததுபோலாகியது.